19வ் டிவது

இலங்கையின் இனக்குழும மோதல் பற்றிய ஒரு வரலாறு
மீள் நினைவு, மீள் இணக்கம், மீள் விளக்கம்.

# சிங்களத்துவமும் சிங்கள தேசியமும்

## மைக்கேல் றொபேர்ட்ஸ்

மார்க்கா நிறுவனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிச் சிற்றாய்வு 04

வெளியீடு: மார்க்கா நிறுவனம், இலங்கை.

2001 ISBN 955-582-045-7
ISSN 1391-6688

அட்டை வடிவமைப்பு:
வரையறுக்கப்பட்ட கொப்பிலைன் நிறுவனத்தைச் சார்ந்த தினி குருகுலசூரிய.

அச்சுப் பதிவு:
வரையறுக்கப்பட்ட யூனி ஆர்ட்ஸ் நிறுவனம்.

உள்ளூர் விலை:
சிங்களம் - தமிழ் ரூபா 30.00 50.00
ஆங்கிலம் ரூபா 50.00

மார்க்கா நிறுவனத்திலோ அன்றேல் புத்தகக் கடைகளிலோ கொள்வனவு செய்யலாம்.

வெளி நாட்டு விலை:
தொகைக் கட்டளைகளுக்கு மாத்திரம்: (தபாற் செலவு உட்பட):
தெற்கு, தென் கிழக்கு ஆசியா: பிரசுரமொன்றுக்கு அமெரிக்க $ 2/- ஆக.
வட அமெரிக்கா பிரசுரமொன்றுக்கு அமெரிக்க $ 3/- ஆக.
மற்றைய நாடுகளுக்கு பிரசுரமொன்றுக்கு அமெரிக்க $ 2.50 ஆக.

குறிப்பிட்ட எந்த பிரசுரங்களுக்கும் மார்க்கா நிறுவனத்துக்கு கொள்வனவுக் கட்டளைகள் அனுப்பலாம். வங்கி வரையல் மூலம் கொடுப்பனவு (குறைந்தளவு அமெரிக்க $ 12/-)
மார்க்கா நிறுவனத்தின் பெயருக்கு எழுதப்பட்டு மார்க்கா நிறுவனம், 93/10, துட்டுகெமுனு வீதி, தபாற் பெட்டி இலக்கம் 601, கொழும்பு 06 என விலாசமிட்டு அனுப்பவும்.

உசாவல்களுக்கு: 94-1-828597. அல்லது மின் தபால் : marga@sri.lanka.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ல் டிவது

இலங்கையின் இனக்குழும மோதல் பற்றிய ஒரு வரலாறு
மீள் நினைவு, மீள் இணக்கம், மீள் விளக்கம்.

# சிங்களத்துவமும் சிங்கள தேசியமும்

## மைக்கேல் றொபேர்ட்ஸ்

2001

மார்க்காவின் இனக்குழும மீள் இணக்கம் தொடர்பான தனிச் சிற்றாய்வுத் தொடர் இலக்கம்: 4

மார்க்கா நிறுவனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

# இலங்கையின் இனக்குழும மோதல் பற்றிய ஒரு வரலாறு : மீள் நினைவு, மீள் விளக்கம், மீள் இணக்கம்

1999 சனவரி முதல் மார்க்க நிறுவனம், "இலங்கையின் இனக்குழும மோதல் பற்றிய ஒரு வரலாறு: மீள் நினைவு, மீள் விளக்கம், மீள் இணக்கம்" என்ற தலைப்பில் ஒரு செய்திட்டத்தை ஊக்கி வளர்த்து வந்துள்ளது. இதற்கென எழுதுமாறு வேண்டப்பெற்ற கட்டுரைகளும் செயலமர்வுத் தொடர்களின் பொழுது நடந்த விவாதங்களும் கீழ்க்காணும் ஒன்றினுள் மற்றதும் வந்து விடுவதான, கொள்குறிகளை – நோக்கங்களை – ஈட்டுவனவாக அமைந்தன.

* முதலாவதாக, இந்த இனக்குழுமப் போட்டியின் கதையை, அவ் அரசியல் வானில் சம்பந்தப்பட்டுள்ள பல்வேறு பகுதியினரதும், மனக்குறைகள் பற்றிக் கவனம் செலுத்துவனவாகக் கட்டமைத்தல், ஆனால் அதே வேளையில், இந்தப் போராட்டத்தின் உலகியல் நிலைப்பட்ட வளர்ச்சிப் போக்குப் பற்றி ஓர் ஆதளப் பார்வை உடையதாகவும் அமைதல் வேண்டும்.

இரண்டாவதாக, மோதல் பற்றிய விளக்கங்களை முன்வைக்க முனையும் பொழுது பல்வேறு புலமைத்துறைகளிடையேயும், அதேவேளையில், இம்மோதலிற் சம்பந்தப்பட்டுள்ள ஒவ்வொரு சாராரிடையேயும் ஒரு கருத்தொருமிப்புக் காணும் வகையில் அமைதல் வேண்டும்.

* இறுதியாக, இவை எதிர்நிலைப்பட்டு நிற்கும் பார்வை நோக்குக்களிடையே மீளவும் இணக்கத்தை – சமரசத்தை ஏற்படுத்துவதற்கான எண்ணக்கரு நிலைப்பட்டனவும், புலமைத்துவ அடித்தளத்தை ஏற்படுத்துவனவுமாக அமைதல் வேண்டும்; அதே வேளையில், இந்தச் சமகால மோதலில் இடம் பெற்றுள்ள முன்னணி எதிராளிகளிடையே ஒரு கருத்தொருமிப்பினை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கும் பாதைகளைக் கண்டறிவதாக அமைதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்செய்திட்டம் நிறைவுறும்பொழுது (ஏறத்தாழ 2002இல்) முப்பது கட்டுரைகளைக் கொண்ட ஒரு வெளியீடு கொண்டுவரப்படும். அதில் இடம் பெறவுள்ள பல கட்டுரைகள், இச்சிற்றாய்வு வெளியீட்டுத் தொடரில் இடம் பெறும். நிதியுதவி கிட்டியதும் மேலும் சில சிற்றாய்வுகளும் இதில் இடம்பெறும். கட்டுமட்டான விலையிடப் பெற்ற இச் சிற்றாய்வுகள் இந்நாட்டின் மூன்று மொழிகளிலும் வெளியிடப்பெறும். இவை, இந்நாட்டின் அறிவாளிகள், ஊடகவியலாளர், அரசியற் செயலாண்மையர், அரச சார்பற்ற நிறுவன ஆளணியினர் ஆகியோரிடத்துச் சென்றடையும் என்றும், அவ்வம் மட்டங்களில், சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றிய சிந்தனைகளுக்கும், கலத்தாய்தல்களுக்கும் இடமளிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வழிவரும் பலாபலன்கள், தீர்மானங்கள் மேற்கொள்வோரை, அவர்கள் சமாதானத்துக்கான ஒரு ஸ்திரமான கட்டமைப்பை உருவாக்க முனையும் பொழுது, அவர்களுக்குப் பாதையமைத்துக் கொடுப்பனவாக அமையும் என்றும் எண்ணப்படுகிறது.

இக்கட்டுரை வழியே புலப்படும் இவ் ஆய்வறிஞரின் ஈடுபாட்டுத் திண்மையையும் அறிவுப் புலமையையும் பெரிதும் மதிக்கிறோம். இக்கட்டுரை பற்றிக் குறிப்புரை கூறிய, அன்றேல் செயலமர்வுகளின் பொழுது கருத்துக்கள் எடுத்துக்கூறிய அறிவாளரின் ஈடுபாட்டுத் திண்மைக்கும் நாங்கள், எங்கள் கூட்டுநிலை நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ் மொழி பெயர்ப்புக்களை மேற்பார்வையிட்ட பேராசிரியர் கா. சிவத்தம்பியின் பங்களிப்பினையும் நாம் பெரிதும் மதிக்கின்றோம்.

பிரதான செய்திட்டத்துக்கான நிதியுதவியைச் செய்த "நொறாட்" நிறுவனத்துக்கும், இந்தச் சிற்றாய்வு வெளியீட்டுத் தொடருக்கு நிதியுதவி வழங்கும் GTZ, SIDA நிறுவனங்களுக்கும் நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

வாசகர்கள் தங்கள் குறிப்புரைகளையும், ஆலோசனைகளையும், அவை ஆய்வாசிரியராலும், இந்தப் பதிப்புக் குழுவாலும் எடுத்து நோக்கப் பெறுவதற்கு (அவற்றை) முதன்மை ஒருங்கிணைப்பாளருக்குத் தெரிவிக்குமாறு வேண்டப்படுகின்றனர் – தொலைநகல் 828597, மின் தபால் Marga@Sri Lanka net.

மைக்கேல் றொபேட்ஸ், கொட்ஃபிறி குணதிலக, தேவநேசன் நேசையா

*முதன்மை ஒருங்கிணைப்பாளர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களத்துவமும் சிங்களத் தேசியமும்

மைக்கேல் றொபேட்

*இந்தக் கட்டுரை [1] மார்க்க நிறுவனத்தின் "இனத்துவ மீள் இணக்கம்" என்ற செய்திட்டத்திற்காகத் தயாரிக்கப்பட்ட ஒன்றாகும். இதிலிருந்து எந்த ஒரு பகுதியாவது மூலம் பற்றிய குறிப்பெதுவுமின்றி மேற்கோள் காட்டப்படவோ அல்லது ஏதாயினுமொரு பகுதி அனுமதியின்றி எடுத்தாளப்படவோ கூடாது.*

பிரித்தானியரின் காலனித்துவ ஆதிக்கம் நிலவிய கால கட்டத்தில் சிங்களத் தேசியம் பற்றிப் பேசப் புகும் ஒருவர், பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னரைக் காலப் பகுதியில் ஏகாதிபத்திய வாதிகளால் தாம் இரண்டாந்தர நிலைக்குத் தள்ளப்பட்டமையை எதிர்த்துச் சிங்கள மக்கள் மத்தியில் எழுந்த பண்பாட்டுத் தேசியவாதப் போர்முக எழுச்சிபற்றி பேசக்கூடும். பிரித்தானிய காலனித்துவவாதிகள் எல்லாச் "சுதேசிகளையும்" மிகுந்த திமிர்த்தனத்துடன் கீழானவர்களாக நடத்தியமைக்கு எதிராக ஒடுக்கப்பட்டவர்களால் கொடுக்கப்பட்ட பதிலடி என்று இதைச் சொல்லலாம். கிறிஸ்தவ மிசனரிமாரினதும் அவர்கள் வழியில் தொடர்ந்தோர்களதும் பௌத்த அவமதிப்பு நடவடிக்கைகள், மற்றும் சிங்கள மக்களை கிறிஸ்தவத்திற்கு மதம்மாற்றும் நடவடிக்கைகள் என்பவற்றுக்கு எதிராக ஏற்கனவே உருவாகியிருந்த பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் செயற்பாடுகளுடன் இந்த எழுச்சி இணைந்தும் மேவியும் செல்வதாக அமைந்தது.

இதன் வளர்ச்சிப் போக்கு 1956 இல் நடைபெற்ற சமூக, அரசியல் மாற்றங்களுடன் சேர்ந்து கொண்டதுடன் அவற்றைத் தூண்டுவதாகவும் அமைந்தது. சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் இயங்கிய மக்கள் ஐக்கிய முன்னணியின் உணர்ச்சியூட்டும் பேச்சுக்களில் வலியுறுத்தப்பட்டுவந்த 'தனிச் சிங்கள' மொழிக் கோரிக்கை காரணமாக இது 'மொழியியற் தேசியவாதம்' என்றும் (உ-ம்: கே. எம். டி. சில்வா - 1981) அழைக்கப்படலாயிற்று. ஆயினும், அந்தப் போக்குகள் அனைத்தையும் உள்ளடக்கக்கூடியதான 'பண்பாட்டுத் தேசியவாதம்' என்ற சொற்றொடரையே நான் இங்கே பயன்படுத்துகிறேன். இவ் எண்ணக்கரு வெறும் மொழியின் அழுத்தத்தை மட்டுமல்லாது *'பாரம்பரியம்'*, *'நாகரிகம்'*, *'வரலாறு'* மற்றும் *'சிங்கள இனம்'* போன்ற எண்ணக்கருக்களையும் தன்னகத்தே கொண்டதாக அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்க நிறுவனத்தினரது தலையீட்டுத் தன்மை வாய்ந்த இந்தச் செய்திட்டத்தின் அடிப்படையே மொழியில் தங்கியிருப்பதால், இந்த விவாதத்தை ஆங்கில மொழியில் நடாத்துவதிலுள்ள வரையறைகள் குறித்தும் மொழி பெயர்ப்பில் வரக்கூடிய திரிபுகள் குறித்தும் கவனமாக இருக்க வேண்டும் என்று கருதுகிறேன். நீண்ட காலமாக சிங்கள உணர்வும், அண்மைக் காலமாக (பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகளில்) சிங்களத் தேசியமும் சிங்கள மொழியிலும் சிங்கள மொழியினூடும் வளர்ச்சியுற்று நிலைபெற்று வந்துகொண்டிருக்கின்றன. அத்துடன் சிங்கள மொழியானது ஒருபோதும் தனியாகச் செயற்பட்டதில்லை.

அது பாளி, சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளுடன் பல நூற்றாண்டுகளாகவும் போர்த்துக்கீஸ், டச்சு, ஆங்கிலம் ஆகிய மொழிகளுடன் அண்மைய காலங்களிலும் ஊடாட்டங்களைக் கொண்டு வளர்ந்து வந்திருக்கிறது. இந்த ஊடாட்டங்கள் கவனத்துக்குரியவையாக இருக்கும் அதேவேளை எமது விமர்சனத்துக்குரிய பரப்பெல்லையாகச் சிங்கள மொழியின் சொற்சேர்க்கையும் சொற்றொகுதியுமே இங்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. சிங்கள தேசிய வாதத்தின்[2] அதிதீவிர வடிவங்களிற்குப் பதிலடி கொடுக்க வேண்டுமென்று ஒருவர் விரும்புவாரானால் அப்பதிலடி சிங்கள மொழியிலும், சிங்கள மொழியினூடாகவுமே கொடுக்கப்பட வேண்டும்.

இந்த விடயம் தொடர்பாகக் குறிப்பிடத்தக்க ஒரு சிக்கல் மிகுந்த பிரச்சினையாக இருப்பது *'ஜாதிய'* என்ற சொல்லாகும். சொல்லிலக்கணப்படி *'ஜாதிய'* என்ற சொல் *பிறப்பு*[3] என்ற அர்த்தத்தையே குறிக்கிறது என்ற போதும் கடந்த 150 வருடங்களாகப் பரந்த அளவில் *'வர்கய'* (குலம்) மற்றும் *'குலய'* (சாதி) என்ற அர்த்தங்களிலேயே இது பயன்படுத்தப்பட்டு வந்து கொண்டிருக்கின்றது, வகை, சாதி, தேசிய இனம், சாகியம் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் இச்சொல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இது தொடர்பான கல்வித்துறை மரபுப்பதங்கள் பரவலாக பரப்பப்படவோ பதியவைக்கப்படவோ[4] இல்லை என்பதால் சிங்கள மொழிப் பேச்சில் *சாகியம், தேசிய இனம்* என்பவற்றை எப்படி வேறுபடுத்திப் பார்ப்பது என்பதற்கான எத்தகைய உடன்பாடுகளும் இதுவரை எய்தப்படவில்லை எனலாம்.

'2000 வருடத்திய வரலாறு' சம்பந்தமான சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கைகளில் காணப்படும் சொல்லாட்சி, ஷான் வர்ணேயின் இழிவுபடுத்தும் கருத்துக்களுக்கு[5] அருச்சுன ரணதுங்க அளித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்வினை போன்றவை, கலாசாரத்தின் பிற பரிமாணங்கள் மீது அதிகளவு கவனத்தைச் செலுத்தவில்லை. இவை யாவுமே தொன்மைக்கு, நாகரீகத் தொன்மைக்கு வைக்கப்படும் ஒரு மனப் பெறுமானத்தின் குறியீடு ஆகும். இப்படியான சந்தர்ப்பங்களில் இந்நெறிமுறையானது ஏனைய மக்களுடைய தொன்மங்களையும் அவர்கள் பேணிப் பாதுகாத்து வருபவற்றையும் இழிவுபடுத்துவதுடனும், ஏனையவரது தத்துவார்த்தக் கோட்பாடுகளுடன் மோதுவதாகவும் இருக்கும். இலங்கையில் கடந்தகாலம் தொடர்பாகத் தற்போது நடந்துவரும் வாசிப்புக்கள் எல்லாம் இன்றைய காலத்தின் தேவைகளை அடியாகக் கொண்டே நடந்து வருகின்றன.

எவ்வாறாயினும் பழக்க வழக்கங்கள் மீதான இந்த அழுத்தமானது ஒன்றும் புதிய விடயம் அல்ல. அத்துடன் இது *பிறட்றிக் அன்டர்சன்* கூறுவது போன்று (ஃபிரீரக் 2000, றொபேட்ஸ் 1996, 2000) அச்சுத் தொழில்நுட்பத்தின் தாக்கம் என்ற கோட்பாட்டுடன் சேர்ந்ததாகக் கொள்ளப்படுதலும் கூடாது. சிங்கள, பௌத்த பாரம்பரியத்தில், *கிரந்தங்கள், விக்கிரகங்கள், இசைக் கருவிகள்* மற்றும் வாய்மொழி (றொபேட்ஸ் 1994: 63 – 64, 2000) என்பவற்றினூடாகக் கையளிக்கப்பட்டு வந்த பாரம்பரியத்தில் நீண்டகாலமாக அறிவுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வந்துள்ளது. இந்த வகையில், *பாரம்பரியம், தொன்மை* என்பவற்றிற்கு விசேட அழுத்தம் கொடுக்கும் விதத்தில் கண்டிய ஆளும் வர்க்கத்தின் கருத்துநிலை உற்பத்திகள் வெளிப்படுத்தப்பட்டு வந்துள்ளன. 1796 முதல் 1815 வரையான காலகட்டத்தில் அவர்கள் பிரிட்டிசாருக்கு எழுதிய கடிதங்கள் விஜயனைப் பற்றிப் பேசும் போது 'மிகவும் கர்ணகடூரமான தன்மை கொண்டவர்களான கொடிய அரக்கர்களை வென்று, வெற்றிவாகை சூடியவனான' என்றோ, 'அதிபரிசுத்தமான மேன்மை தங்கிய ஆரிய குலத்துதித்தவனான விஜயன்' என்றோ" (விமலானந்த 1973: 474: 1984: 67) குறிப்பிட்டதுடன், பிரிட்டிசாருக்குத் தொடர்ச்சியான தொன்மையான பாரம்பரியச்' சடங்குகளைக் (விமலானந்த 1984: 63, 73) கடைப்பிடிப்பதன் அவசியம் பற்றி வலியுறுத்துவதாகவும் அமைந்திருந்தன.

*சிங்கள* அல்லது *எலு* என்கிற மொழியானது அதன் இன்றைய வடிவத்தை 13ம் நூற்றாண்டைளவிலேயே பெற்றுக் கொண்டது என்பதை நாம் கவனத்திலெடுத்துக் கொள்வது பயனுள்ளதாகும். ஒரு மொழி என்ற வகையில் சிங்கள மொழியானது குறிப்பிடத்தக்க அளவுக்கு ஒழுங்கான முறையில் பயிலப்பட்டு வந்துள்ளது. பிராந்திய மட்டங்களில் நிலவிய, நிலவுகின்ற வேறுபாடுகளைக் கவனிக்கும் ஒருவர் அதன் பேச்சு வழக்குப் பற்றிச் சொல்வதில்லை. இந்த வேறுபாடுகள் பெரிதும் சொல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளத்திற்குரியவையே ஒழிய அதன் சொற்றொடர்கள் சம்பந்தப்பட்டவை அல்ல.[6] இது மொழியின் வெளிப்பாடுகளில், குறிப்பாக மத பண்பாட்டுத்துறை சார்ந்த - துக்கம் துக்கோற்பத்தி என்பவை குறித்த வெளிப்பாடுகளில், உருவகம் மற்றும் படிமம் என்பவற்றில் குறிப்பிடத்தக்களவு பொதுமைப்பாட்டைக் கொண்டதாக இருப்பதைக் காணமுடியும்.

ஒருபுறம் சிங்கள மொழியில் எழுதப்பட்ட அன்றைய ஓலைச் சுவடிகளின் கருத்து வெளிப்பாடுகள் நடனத்தின் தன்மை பற்றிய படிமங்களால் அலங்கரிக்கப்பட்டு வந்தன என்றால் மறுபுறத்தில் வாய்மொழி மூலமான கருத்து வெளிப்பாடானது உரைநடை, பாட்டு, கவிதை போன்ற வடிவங்களினூடாக வெளிப்பட்டு வந்தது. நான் இங்கு வலியுறுத்துவது என்னவென்றால் 20ம் நூற்றாண்டின் இறுதி வரைக்குமான சிங்கள மொழியின் கவித்துவப் பரிமாற்றத்தின் மையத்தையேயாகும். இந்தக் கவிதையின் சக்தியானது அதன் விழித்தெழச் செய்யும் சக்தியிலும், *'சமுத்திர கோச'* வின் எளிமையிலும் தங்கியிருக்கின்றது. இது கவிதையின் சில வரிகளையோ அல்லது முழுமையையுமோ மக்கள் மனனம் செய்துகொள்வதற்கு வசதியாக உள்ளது.

பிரித்தானியருக்கு முந்திய காலத்திலிருந்த சிங்கள உரைநடையானது அடிக்கடி சமஷ்கிருத சொற்களை உள்ளடக்குவதாக இருந்தபோதும், பெரும்பாலான கவிதைகள் எலு மொழிவடிவத்தைக் கொண்டவையாகவும் சமஷ்கிருத மொழியிலிருந்து உள்வாங்கல்கள் செய்யப்படுவதை மிகவும் அரிதாகவே கொண்டவையாகவும் அமைந்திருந்தன. உரைநடையிலும் கூட, தமிழ் மற்றும் சமஷ்கிருதச் சொற்கள் பொதுச் சொற்களாகப் பயன்படுத்தப்பட்டது ஒன்றும் இயல்பாக வந்துவிடவில்லை. சில புலமையாளர்கள் இத்தகைய பிறமொழிச் செல்வாக்கு ஏற்படுவதற்கு எதிராக அவற்றை எதிர்க்கிற அல்லது புறக்கணிக்கிற கலாசாரப் போராட்டங்கள் நடத்தியிருந்தார்கள். (உ-ம்: வட்டவே தேரர், வடிகம தேரர் ஆகிய 15ம் நூற்றாண்டைச் சேர்ந்த தேரர்கள்)[7] இந்த இரு பிக்குகளினதும் முயற்சிகளை, தொன்மங்களைப் பேணும் முயற்சிகளின் மிக ஆரம்பகால நடவடிக்கைகள் என்று குறிப்பிடலாம்.

மத்திய காலம் என்று நான் கூறும் (1236-1815) காலகட்டத்தில் சிங்கள அரசின் கருத்துநிலைவாதிகள் 'மகாவம்சத்தின் வம்சக் கோட்பாட்டையும் மற்றும் அவற்றின் கிளைகளையும் ஏற்றவர்களாக இருந்தார்கள். இந்தக் கதைகள் ஒருபோதும் புள்ளிவிபர அடிப்படையில் அமைந்தவை அல்ல. இவற்றுக்குள் வேறுபாடுகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டன. ஆனால் இந்த வேறுபாடுகள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயம் சார்ந்தவையாகவே தெரிகின்றன. மொத்தத்தில், இங்கே ஒரு குறிப்பிடத்தக்க தொடர்ச்சி இருந்தது. அவை (1) சிறிலங்கா/ லங்கா/ மூவிராசர்[8] முதலியவற்றை ஆசீர்வதிக்கப்பட்ட வையக, புத்தபிரானால் ஆசீர்வதிக்கப்பட்டவையாக வெளிப்படுத்தின. அத்துடன், (2) சிங்கள மக்கள் உயர்ந்த மக்கள் என்று தெரிவித்தனர். இந்த வகையில் *தம்ம பதம்* மற்றும் *சிஹல தீபம்* ஆகியவற்றின் கோட்பாடுகளிலும் தொடர்ச்சியான ஓர் அழுத்தம் ஒருவருக்கு இருக்கவே செய்யும். இவ்வகையில் மத்தியகாலப் பகுதியின் பாரம்பரியமானது (3) அரசுக்கும் மதத்துக்குமிடையிலான தொடர்பை வலியுறுத்துகிறது. இது புலமையாளர்களைச் சிங்கள பௌத்தம் பற்றிப் பேச அனுமதிக்கிறது.

இந்தக் காரணங்களாலும், கிறிஸ்தவத்திற்கு 16ம் நூற்றாண்டுவரை அதைப் பின்பற்றுபவர்கள் யாரும் இல்லாததாலும் தான் ஒபயசேகர 16ம் நூற்றாண்டுவரை, 'சிங்களவராக இருப்பது என்பது ஒரு பௌத்தராக இருப்பதுதான்' (1979 - 279) என்று கூறுகின்றார். போர்த்துக்கேயர் வரும் காலம் வரையிருந்த இரண்டு அடையாளங்களின் சேர்க்கையைப் பற்றி அவர் குறிப்பிடுகின்றார். இது ஒரு சர்ச்சைக்குரிய விடயமாக இருக்கலாம். ஆனால் இந்தியாவில் பௌத்த மதம் மறைந்துபோன பின்னான காலத்தினைப் பொறுத்தவரை அதாவது பதின்மூன்றாம் நூற்றாண்டுக்குப் பின்னர் இதில் ஓரளவு உண்மை இருக்கவே செய்கிறது.[9] இது இப்படி இருக்கையில், மத்திய காலத்தைச் சேர்ந்த சிங்கள அறிஞர்கள் சிங்களவர்களை[10] *'லக்வாசி'* என்று குறிப்பிட்டார்கள். (சிறிலங்கா வாசிகள் என்பது இதன் அர்த்தம்)

மேலும் *சீதவாக்க* மற்றும் கண்டிய காலத்துக் *ஹட்டன்கவி*[11] யில் வெளிப்படையாக, பல்வேறு ஏகாதிபத்திய சக்திகள் சாதி, மத மறைவுக்கு எதிராக மற்றும் *சடி தெமளவுக்கு*[12] எதிராகவும் *'கன்னடி", 'தொலுவார', 'காபேரி', 'துப்பாஹி'*[13] போன்ற அந்நியர்களுக்கு எதிராகவும் ஒரு சிங்கள கூட்டு அடையாளம் வெளிப்படுத்தப்படுவதைக் காணலாம். இந்த அடையாளம் சில காலங்களில் மலைநாட்டிலும் மற்ற இடங்களிலும் உள்ள இரு பகுதிச் சிங்கள மக்களையும் ஒன்றிணைப்பதாயிருந்தது. ஆனால், இது ஒருபோதும் ஓர் உயர்குழாமின் சிறப்பாக இருந்ததில்லை. தவிரவும் இந்தோ-சிங்கள சக்கரவர்த்தி முறையிலமைந்த அரச பரம்பரையின் மட்டத்தில் ஓர் அம்சமாகக் கொள்ளப்பட்டதும் இல்லை. இந்த உணர்வுகள், பிரசன்தி வடிவிலான மாவீரர்களையும், மன்னர்களையும், தலைவர்களையும் புகழ்ந்து பாடும் பாடல்களிலேயே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. கவிக் கதா போல, இவை பெருமளவுக்கு, கற்றறிந்த, புலவர்களால் பாடப்பட்டவையல்ல. இவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்திற்கு மக்களைத் திரட்டும் 'ராஜகாரிய்'[14] நடவடிக்கைகட்காகப் பாட்டு ஒரு கருவியாகப் பயன்படுத்தபட்ட சாதாரண நாட்டார் பாடல் வகையைச் சார்ந்ததாயும், திரும்பத் திரும்பப் பாடக்கூடிய விதத்தில் பிரபல மானவையாகவும் அமைந்திருந்தன.

இந்த வேறுபாடுகளும் எதிர்ப்புகளும், இந்தியாவிலிருந்து குறிப்பிடத்தக்க அளவு *விக்கிரகங்கள், ஓவியங்கள், படிமங்கள்* வடிவிலான பண்பாட்டுக் கடன் பெறப்பட்டமை, மற்றும் இந்தியாவிலிருந்து குறிப்பிடத்தக்க அளவுக்கு இலங்கை நோக்கிக் குடிப்பரம்பல் ஏற்பட்டமை என்ற ஒரு சூழ்நிலையில் வைத்து நோக்கப்பட வேண்டும். செயற்பாடுகள் ஒரு ஸ்திரமான கலாசார ஒருங்கிணைப்புக்கு வழிவகுத்தன எனலாம். மத்திய காலத்தில் இவற்றுடன் சேர்த்து இன்னொரு பரிமாணமாக ஒரு ஒன்றிணைப்புக்கு வழிவகுத்தன எனலாம். மத்திய காலத்தில் இவற்றுடன் சேர்த்து இன்னொரு பரிமாணமாக ஒரு *ஒன்றிணையக் கூடியதும் சூழ்ந்துகொள்ளக் கூடியதுமான ஒரு கருத்துநிலை* ஆற்றல் ஒன்று அக்காலத்தில் நிலவியதையும் அவதானிக்க முடியும். முன்னைய நூற்றாண்டுகளில் இருந்தது போல, இந்தக் கடவுளர்கள் பௌத்த வழிபாட்டுத் தலங்களில் புத்தபிரானின் *'வர்'* த்தின் கீழ் தொழிற்படும் தேவதைகளாக (ஒபயசேகரா, 1966) ஒன்றிணைக்கப்பட்டிருந்தார்கள். இவ்வாறே, தனிப்பட்ட யுத்த வீரர்கள், புரோகிதர்கள் மற்றும் உயர் குடிப்பிறந்தோர்கள் *கொவிகம* சிங்களவர்களுள் பரம்பரை பரம்பரையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தனர். அல்லது மக்களின் பெரும்பான்மையான பிரிவினர் காலம் செல்லச் செல்ல கொவிகம சிங்களவர்களாக அங்கீகரிக்கப்பட்டனர். உதாரணமாக, வன்னிராஜ பரம்பரையிலிருந்து குடிபெயர்ந்தவர்கள் கண்டிய *றதல* உயர்குடியினருடன் திருமண உறவுகளை ஏற்படுத்திக் கொண்டனர். *கண்டிய நவந்தன்னோ, சலாகம, துரவ, கராவ* போன்ற சாதியினுள்' இணைத்தோர்[15] குடியேறிய மக்கள் குழுக்களுள் அடங்குவர்.

மாற்றாகச் சிங்களவர் அல்லாத கூறுகள் சிங்கள அரசிலும் சமூகத்திலும் அவற்றின் அமைப்புக்களின் அடக்குமுறையில் தனித்துவமான குழுமங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. இந்த வகையில் *'யோன்'* (முஸ்லிம்) இனத்தவர்கள் கண்டிய அரசின் *மடிக பத்த* (போக்குவரத்துத்துறை) பகுதியினராக ஏற்கப்பட்டனர். சுருக்கமாகச் சொன்னால், அன்றைய சமூக, அரசியல் ஊடாட்டங்களின் தன்மையானது வெளியாட்களை முழுக்க முழுக்க ஒதுக்குவதாக அமைந்திருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், இவ்வாறு வந்து குடியேறிய நபர்களோ குழுக்களோ காலப்போக்கில் தம்மை முழுமையாக இங்குள்ள இனக் குழுமங்களுடன் முற்றாகக் கலந்து விடாதவர்கள். சிங்களவர்கள் அல்லாத பௌத்தர்களல்லாத பிரிவினர்களுக்கான இடத்தில் சேர்ந்து கொள்ளாமலும் இருந்தவர்களைப் பொறுத்தவரை இது எப்போதுமே அன்றைய ஆட்சித் திட்டத்தின் அதிகார இறுக்கத்தின் கீழ் துன்பங்களை எதிர்நோக்குபவர்களாகவே இருந்தனர். இந்த வகையில் கத்தோலிக்க, இஸ்லாமிய மத நடவடிக்கைகள் கண்டிய அரசின் கீழ் சகிக்கப்பட்டு வந்தாலும் அவற்றுக்கு எல்லைகள் போடப்பட்டிருந்தன. விக்கிரமரத்ன சொல்வது போல் அவர்கள் ஒரு குறைந்த கடவுளின் பிள்ளைகள். (1995 xxxv) என்றே கொள்ளப்பட்டனர்.

இத்தகைய நெகிழ்வுத் தன்மை, உள்வாங்கும் தன்மை என்பன அன்றைய வெளியொதுக்கும் தன்மையுடன் இணைந்தே இருந்ததெனினும், அரச அதிகாரம், '*சங்க்*', '*தம்ம்*' போன்ற அமைப்புக்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் என்பன வெளியாரால் சவாலுக்குள்ளாக்கப்படும் போது வன்முறை சார்ந்த எதிர்வினைகளைக் காட்டுவதாகவும் இருந்தன.

1740களில் கண்டியின் மையத்தில் சிங்கள கத்தோலிக்கர்களும் அவர்களது மிசனரிமார்களும் அதிகளவு சக்திமிக்கவர்களாக மாறிக்கொண்டிருந்தபோது, அவர்களது புத்தகங்கள் எரிக்கப்பட்டன. அவர்கள் பறங்கியர்கள் என்று கூறி வெளியேற்றப்பட்டனர். (சூளவம்சம் 11, ப. 253) திரும்பவும், 18ம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் வந்த நூல் ஒன்று, யேசுவை ஒரு தச்சு '*பரேதய*' என்றும் '*மாறா*' வின் தூதுவர் என்றும் குறிப்பிட்டது. இக்காலத்தில் வந்த இன்னொரு நூல், சைவர்களைக் காமாந்தகர்கள் என்றும் அருவருப்புக்குரியவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளது. (யங் உம் சேனநாயக்கவும் 1978).

வம்ச பாரம்பரியத்தின் மையமான கருத்தாக '*பரசத்துரன்*' அல்லது '*பரருமா*' (அந்நிய எதிரிகள்) போன்ற கோட்பாடுகள் கண்டிய அரசுக் காலத்தில் குறிப்பிடத்தகுந்தவிதத்தில் மீளுருவாக்கம் செய்யப்பட்டன. *"ஹட்டன் கவி"யில்* வரும் சொற்றொடர்கள் மட்டுமல்லாமல், குறைந்தபட்சம் இரண்டு தடவைகளாவது யுத்தக் கவிகளில் வரும் வீரத் தலைவனான மன்னன் வலிமை பொருந்திய கரையாகவும் நிலமாயும் *(வெரல்ல)* வர்ணிக்கப்படும் அதேவேளை, எதிர்க்கும் ஏகாதிபத்திய சக்திகள் சமுத்திரத்திற்கும்[16] ஒப்பிடப்படுவதைக் காணலாம். ஆகவே, "*உள்ளார் எதிர் வெளியார்*"[17] என்று பிரிக்கின்ற ஒரு மாதிரியத்தைக் கொண்டதாக இது இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த "அபிவிருத்தி/வளர்ச்சி" சிங்களப் பேச்சு வழக்கின் அடியமைப்பிலுள்ள இன்னொரு அமைப்புடன் தொடர்புறுகிறது. அதாவது *"பிட்ட"* (வெளியே) என்னும் சொல்லின் பொருள் சந்தர்ப்பத்திற்கேற்ப விரியும்/சுருங்கும் தன்மையாகும்.

ஒரு கிராமத்திலுள்ள ஒரு *"கொவி"* - இன்னொரு கிராமத்திலுள்ள கொவி

அந்தக் கிராமத்தில் (XY) உள்ள *கொவி* - எதிர் - அந்தக் கிராமத்திலுள்ள மீதியாட்கள்

இந்த XY கிராமம் - எதிர் - *பிட்டகன்காரயோ* (வெளியூர்க்காரர்) அல்லது *கமன் பஹரஅய* (பயணத்தின் அப்பால் உள்ளவர்)

*றட்ட* - எதிர் - *தொட்ட* (பியதாச சிறிசேனவின் ஜயதிஸ்ஸவும் றோசலினும் என்ற நாவலில் *"றட்ட"* என்பது மரியாதைக்குரிய *கொவி* என்று வருகிறது. அதற்கு எதிரானது தீட்டுப்பட்ட கரையோரப் பகுதிகள் (அதாவது *"கராவ"* ஆட்கள்)

வெறள - எதிர் *"முஹுது"* (இது இங்கிரீசி ஹட்டன பாடலில் வருவது இதில் *"முஹுது"* (கடல்) ஆங்கிலேயர் கடற்கரை (*வெரலு*) ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் ஆகும்)

*றட்ட*, *பர* என்ற சொற்களுக்குரிய அர்த்தங்களையும் *'பிட்ட'* என்ற சொல்லின் ஒவ்வொரு நேரத்தில் ஒவ்வொரு வடிவத்தில் இருக்கும் சீனப்பெட்டி மாதிரி தனக்குரிய ஆதாரங்களாகப் பெற்றுக் கொள்கிறது. *"றட்டுன்"* (மண்ணின் மைந்தர்) என்ற சொல்லுக்கு எதிராக *றட்ட* என்ற சொல்லிலிருந்து பிறந்தவையான *றட்டு* என்பது பிறதேசத்தவர் அல்லது அந்நியர் என்ற அர்த்தத்தில் பாவிக்கப்படுகிறது. *பர* என்பதும் கூடப் பல்வேறு அர்த்தங்களைக் கொண்ட சொல்லாக உள்ளது. உண்மையில் சிங்கள மொழி அகராதிகள் 18 அர்த்தங்களை இவற்றிற்குரியதாகக் குறிப்பிடுகின்றன. (இவற்றில் சில ஒத்த சொற்கள் ஒரே அர்த்தத்தைத் தருகின்றன. உ-ம்: *விருத்தவாஹிய உம் சத்துருவும்*) இவற்றுள் *உத்தம*, *சிரேஷ்ட* என்ற வழக்கொழிந்த பண்டைய அர்த்தங்களும் அடங்குகின்றன. இவற்றில் ஒன்று *பிட்ட*, இதனால் *பிட்ட*, *பரா* என்பன ஒத்த சொற்களாகி விடுகின்றன. எவ்வாறாயினும், மத்திய காலத்திலிருந்து 20ம் நூற்றாண்டு வரையான காலம் முழுவதும் இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டு வந்ததெல்லாம் மாற்றான் அன்னியன், எதிர் என்ற அர்த்தத்தில்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறக்கணிக்கத்தக்க அளவு கொஞ்ச அளவில்தான் என்றாலும், குறிப்பாக நவீன கால செவ்வியல் இலக்கியங்களில் *பர* என்ற சொல் இந்த அர்த்தத்தில் மட்டும் பாவிக்கப்படவில்லை என்பதும் அது மாற்றார் என்ற பொதுவான அர்த்தத்திலே பாவிக்கப்பட்டுள்ளதையும் காணலாம். எவ்வாறாயினும், மத்திய காலத்தின் ஆரம்பத்தில் வந்த சூளவம்சத்தில் மாகனினதும் அவனது அழிவு நடவடிக்கைகளும் பற்றிய இடங்களிலும் இச்சொற்கள் பாவிக்கப்பட்டன. 17ம் நூற்றாண்டிலும் அதற்குப் பிறகும் வந்த "ஹட்டன்" கவியிலும் இது போத்துக்கீசரைக் குறிப்பிடுகின்றது. இவர்கள் அடிக்கடி *பறங்கியர்* என அழைக்கப்பட்டனர். இத்தகைய அரசியல் மயப்படுத்தப்பட்ட வெளிப்பாடுகளின் இழிவுபடுத்தும் அர்த்தத்தினைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தொகுத்துச் சொல்வதானால், இந்த விடயத்திலுள்ள எமது அக்கறை என்னவென்றால், கோட்பாட்டு ரீதியில் *"றத்து"*, *"பிட்ட"* , *"றட்ட"*, *"அய"* என்ற சொற்கள் *"பறயோ"* (பர என்ற சொல்லின் பன்மை) என்ற அர்த்தத்தில் பயன்பட்டுள்ளன என்பதைக் காட்டுவதுதான். இப்போது எம்மிடம் விரித்தும் சுருக்கியும் பொருள் கொள்ளுகின்ற ஒரு குறிப்பிடத்தக்க சொற்பொருள் ஆய்வியல் முறை உள்ளது. இதைச் சிங்கள மொழி பேசுவோர் எப்போதும் இந்த மொழி அமைப்பைப்பற்றியோ அவை தமது குறிப்பான தேவைகளுக்கேற்ப செயற்படும் விதத்தில் பிரக்ஞை பூர்வமாகப் பயன்படுத்தப்பட முடியும் என்றோ அறிந்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. இது பெரும்பாலும் அவர்களது பிரக்ஞையுணர்வின் வாயிலுக்கு அப்பாலானதாக, நிலத்தின் கீழ் மறைந்திருக்கும் ஒன்றுபோல உள்ளதென்றே நான் கருதுகின்றேன்.

ஒரு அவதானி என்ற முறையில், *'இரட்டை எதிர்கள்'* முறையினைப் பயன்படுத்தி நான் செய்துகொண்ட ஒரு மாதிரி வடிவம்தான் இது. *லெவி - ஸ்ரோஸ்* குறிப்பிட்டதுபோல பின்னையது அமைப்பியல் வாதத்துடன் சம்பந்தப்பட்டிருக்கும் அதேவேளை இங்கே அதன் பயன்பாடு ஓர் அமைப்பியல்வாத அடிப்படையில் அமைந்த மாதிரி வடிவின் ஓர் அம்சமாக இல்லாதபடியால், அது இந்த அணுகுமுறையிலிருந்து, இருப்பு நிலைப்பட்டஉலகம் பற்றிய எனது அழுத்தங்களுக்கிணங்க விலக்கிக்கொள்ளப்படுகிறது.[18] அத்துடன் இதை உள்ளூர் மொழிப் பேச்சாளர்களது உறவுகளிலிருந்து முற்றாக வெளியே நிற்கக் கூடிய ஒரு பிரக்ஞையற்ற அமைப்பு வடிவமாக இருக்க நான் அனுமதிக்கப் போவதில்லை.

என்னைப் பொறுத்தவரை வேறுபாடுகளை அர்த்தமுள்ளதாகவும் சக்தி வாய்ந்ததாகவும் மாற்றுவதற்கு உதவக்கூடிய ஒரு சட்டக வடிவமாகவே இதைக் கருதுகிறேன். சில உள்ளூர்ப் பேச்சாளர்கள் இந்த வடிவத்தைப் புரிந்து கொள்ளவும் அல்லது அதை உரிய சந்தர்ப்பத்தில் பயன்படுத்தவும் உரிய ஆற்றலைக் கொண்டவர்களாக இருக்கவும் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையில், *இங்கிரிசி ஹட்டன* வின் ஆசிரியரான வலிகல முதலி, சிறிவிக்கிரம ராஜசிங்கனை தனது வீரத் தலைவனாக சித்தரிக்கும் போது அவனை *வெறள* (கரை) ஆகவும் ஆங்கிலேயரை *முஹு"த* (கடல்) ஆகவும் சித்தரிக்கும் நோக்கத்துடன் செயற்பட்டிருப்பதைக் காணலாம். இத்தகைய உருவகங்கள் மூன்று காரணங்களுக்காகச் சிங்கள மக்கள் மத்தியில் உணர்ச்சியைத் தூண்டுகின்ற எதிர்வினைகளை உருவாக்கும் ஆற்றல் மிக்கவையாக இருக்கும் என்று நான் ஊகிக்கிறேன். ஒன்று எல்லா மனிதர்களுக்கும் உள்ள காரணம். அதாவது அவர்கள் தம்மைப்பற்றிய கருத்துநிலை ரீதியான அனுபவமானது, ஒவ்வொருவரும் ஓர் உட்புறமும் வெளிபுறமும் கொண்ட ஒரு கொள்கலன் போன்றவர்களாக இருப்பதால், எளிதில் ஊடுருவக் கூடியது என்பது பற்றிப் பூரணமாக அறிந்திருப்பது. இரண்டாவது, குறிப்பிடத்தக்களவு சிங்களவர்கள் துட்ட கெமுனுவின் வரலாறு பற்றிய வன்மையாகப் பதியத்தக்க படிமத்தை அறிந்தவர்களாக இருப்பது. இந்தத் துட்ட கெமுனு அரசனாக வரப்போகிற ஒரு சிறுவனாக இருக்கையில் *'தக்குனின் கொளு முஹு'தாய், உத்துறின் ஹடி தெமிழய்'* (தெற்கே ஊமைக் கடலும் வடக்கே கட்டுக் கடங்காத அருவருப்பான தமிழர்களும்) இருப்பது பற்றிப் பேசுகின்றான். மூன்றாவதாக நான் இவற்றை விளக்க முனைகையில், இந்தப் படிமங்கள் (சாதி அரசியல் உள்ளிட்ட) உள்ளூர் அரசியலைப் பயன்படுத்திச் செய்யப்படும் விளக்கங்களுடன் தொடர்புடையவையாக அமையும் என்கிற காரணம். அந்த வகையில், *பிட்ட, றட்ட, பர* மற்றும் *முஹு"த* எல்லாமாகச் சேர்ந்து, சிங்கள உலகத்தின் கூட்டு, குழுவாதம், எதிர்ப்பு என்பவற்றை வெளிப்படுத்தும் இன்றைய நடைமுறையின் ஒரு பகுதியை உருவாக்குகின்றன. அவற்றின் அளவு கோல்கள் பக்கச் சார்பினவாகவும், சூழ்நிலைக்கேற்ற விதத்தில் மாறுபடக்கூடியவையாகவும் அமையும்.

மானிடவியல் எழுத்துக்கள் *(கலாற்றி 1982 : ஹேர்ஷ்பெல்ட் 1987 : 95-150)* கூறும் அர்த்தத்தில் 'குழுமப் பெயர்வு' அல்லது 'பெயர்வு'? என்ற அர்த்தங்களில் அழைக்கப்படக்கூடிய விதத்திலான ஓர் அர்த்தத்தை *"பிட்ட", "றட்ட", "பரா"* என்ற சொற்கள், அவற்றின் சில பயன்பாடுகளில் உருவாக்குகின்றன. இந்தக் கோட்பாடுகள், பேச்சாளர் எழுத்தாளரின் அடையாளம், அவரது வெளிப்பாட்டின் நடவடிக்கையின் தளம் என்பனவற்றைப் பொறுத்தும் தமது அர்த்தங்களைக் கூட்டு ஆட்சிகளின் எல்லைப் பிரதேசம் முழுவதும் பெயர்வுறச் செய்யக்கூடிய சொற்களைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றன. இத்தகைய பல் அர்த்தங்கள் இத்தகைய அர்த்த வடிவங்களின் முக்கியத்துவத்தைக் குறைக்கும் விதத்தில் அர்த்தம் கொள்ளப்படக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'சூழ்நிலைசார் இனத்துவம்'* மற்றும் *'திரவநிலை'* அர்த்தங்களுக்கான உசாத்துணைகளில் சில புலமையாளர்கள் இதைச் செய்கிறார்கள். இதன் விளைவு என்னவென்றால் இவ்வாறு செய்பவர்கள், இத்தகைய தமது பகுப்பாய்வுகளைத் தமது சொந்தத் திட்டமிடற் காரணிகளுக்கு ஏற்ப பயன்படுத்துவதுடன் ஓர் ஆடையிலுள்ள 'லேபிளை' மாற்றுவது போல் இவற்றைச் சேர்க்கவும், இல்லாமல் ஒதுக்கிவிடவும் செய்கின்றார்கள். இத்தகைய வாசிப்புகள், தொழில் நோக்கில் செயற்படும் புலமையாளர்கள் மத்தியில் பொதுவாகக் காணப்படுகிறது. இத்தகைய விளக்கத்திற்கு எதிராக, சூழ்நிலை சார்ந்த பெயர்வு, X என்ற அர்த்த மட்டத்திலிருந்து, அதைவிட அதிகளவில் உள்ளகப்படுத்தக்கூடிய Y என்ற அர்த்த மட்டத்திற்கு உயர்த்துவது என்பதை X என்பது ஒரு உடையை தூக்கி வீசுவது போலத் தூக்கி வீசப்பட்டுவிட்டதாக அர்த்தப்படுத்தப்பட முடியாது என்று நான் கருதுகிறேன். அந்தச் சூழ்நிலையில் X என்ற அர்த்தமட்டம் இப்போது பொருத்தப்படவுள்ளதாக இருக்கின்ற அதேவேளை அது இன்னமும் கையிருப்பில் இருக்கிறது. ஆகவே அது எப்போதும் ஒரு பேச்சாளர் எழுத்தாளருக்கு பொருத்தமான சந்தர்ப்பம் வரும்போது எழுத்தாளப்படக் கூடியதாக உள்ளது. இங்கிலாந்தின் இரு மாநிலங்களான லக்காஷயர், யோக்ஷயர் ஆகியவற்றைச் சார்ந்த இருவர் (Langashirreman, ஒரு Yorkshireman உடன்) புளித்துப்போன விதத்தில் தங்களது கிறிக்கட் அணிகளில் ஒன்றைச் சாந்திருப்பது பற்றி விவாதிக்கையில் அவற்றைத் தனது ஆங்கில தேசபக்தியை விட்டுவிட்டுக் கதைப்பதாக அர்த்தம் கொள்ள முடியாது. ஆனால் அதை அவர்கள் கையிருப்பில் வைத்திருப்பார்கள். உண்மையில், ஆங்கில அணியுடன் கூட்டுச் சேர்வதென்பது அவரது வாழிடம், பிரதேசம் என்பவற்றைப் பொறுத்து ஓரளவுக்கு அமையக் கூடும். இவ்வகையில், *பிட்ட, றட்டு, பரா* மற்றும் *முஹீத* என்பவை பாவிக்கப்படும் சூழ்நிலையை, இச்சொற்கள் பலவீனமானவை என்ற அர்த்தத்தில் விளங்கிக்கொள்ளக் கூடாது. நிலத்தின் கீழ் மறைந்திருப்பது போன்ற இந்தச் சொல் பொருள் ஆய்வு மாதிரி வடிவத்தின் தன்மையாகாது. ஓர் உள்ளக சக்தியை வழங்குகிறது. முக்கியமாக எந்தவொரு உணர்வுக் கணத்திலும், ஒவ்வொரு மட்டத்திலுள்ள விரிவுபடுத்தும் சுருக்கும் அமைப்புக்கள் ஒரே பெறுமதியைக் கொண்டதாகக் கொள்ளப்படக் கூடாது. இந்தவகை சீனப் பெட்டி அமைப்புகளுடனான சூழ்நிலைப் பெயர்வு, மற்றைய மட்டங்களை விட அதிக முக்கியத்துவத்தை இந்த அமைப்புக்களிற் குறிப்பிட்ட மட்டங்களுக்குக் கொடுக்க முடியுமான சந்தர்ப்பங்களில் நடக்கக் கூடும். இங்கேயுள்ள விவாதம் என்னவென்றால், *பிட்ட, றட்டு, பரா* மற்றும் *முஹீத* என்பவை ஒன்று சேர்ந்து, காலனித்துவ மேலாதிக்கத்தின் குறிப்பான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பங்களுக்கு மட்டுமேயான தன்மைக்குரிய நிபந்தனைகளில் ஒன்றை உருவாக்குகின்றன என்பதாகும். ஓர் அந்நிய ஆக்கிரமிப்பாளன் வரும் போது, *பரா சத்துரன்* என்பது அருகிலுள்ள *பிட்ட கங்காரயோ* வைவிட அதிகம் வன்மை மிக்க ஒரு வார்த்தையாகப் பயன்படுத்தப்படும் என்று ஒருவர் நினைக்கக் கூடும். ஆனால், இந்த அழுத்த வேறுபாடுகளைக் கல்லில்[19] எழுதிய விடயங்களாக ஒருவர் கருதிவிடக் கூடாது.

## பிரித்தானிய மாற்றங்கள்

மேற்சொன்ன ஆய்வு, சிங்களவர் வளமான கலாசார பாரம்பரியங்களையும் அவை இணைக்கப்பட்ட ஓர் அரசையும் கொண்டிருந்தது பற்றிக் குறிப்பிட்டது. அவர்கள் தம்மிடையேயான கருத்துப் பரிமாறல்களுக்காகப் பல்வேறு வழிகளை, வாய் மொழி மூலமான எடுத்துரைப்புக்களை உரைநடையிலும் கவிதையிலும், மதம் மற்றும் சடங்குகள், *ராஜகாரிய* கருத்திற்காக ஆட்திரட்டுவது, ஓவியம், சிலைவடித்தல், யாத்திரைகள் மற்றும் ஒற்றர்கள், தலைமைக்காரர்களது அவ்வப்போது நடக்கும் பெரிய ஊர்வலங்கள் போன்றவற்றைக் கொண்டிருந்தனர். மாத்தறை கால (1750-1900) இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி உயர்கலாசாரத்தின், எழுத்துவடிவிலான மற்றும் வாய்மொழி மூலமான வெளிப்பாடுகளைச் செய்வதில் மக்களது அதிகரித்துவரும் பங்களிப்புகள் நிலவி வந்துள்ளன. கருத்துப் பரிமாற்றங்கள் ஆறுதலாக நடந்திருக்கலாம். ஆனால் இவை, நிச்சயமாக அர்த்தமற்றவையோ முக்கியமற்றவையோ அல்ல (றொபேட்ஸ் 2000) என்பதே.

அந்த நடைமுறையினூடாகவும் வம்ச பாரம்பரியத்தின் பலம் காரணமாகவும் போத்துக்கேயர்களுக்கும் அவர் பின்வந்த அந்நிய ஆக்கிரமிப்பாளர்களுக்கும் எதிரான தொடர்ச்சியான யுத்தங்கள் காரணமாகவும் ஒரு ஒருமித்த சிங்கள பிரக்ஞை வேர்கொள்ளத் தொடங்கியதுடன் இது *திரிசிங்கள* வின் தலைநகரமான செங்கடகலையில் (மஹாநுவர) மையங்கொள்ளத் தொடங்கியது. இந்த ஒருமித்த அடையாளம், இன்றைய நவீன அர்த்தத்தில் சொல்லப்படும் தேசிய வாதம் அல்ல. ஏனென்றால் இது அபேத வாதிகளின் ஜனரஞ்சக இறைமைக் கருத்துநிலை அது தன்னுடன் சேர்த்துக்கொண்டதாக இருக்கவில்லை. அத்துடன் இது சுயநிர்ணய உரிமை என்ற அரசியல் கோட்பாட்டுடன் வெளிப்படையாகச் சம்பந்தப்பட்டதாகவும் இருக்கவில்லை. அந்நிய ஆதிக்கங்களை எதிர்த்து இது தொடர்ச்சியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பி அடிக்கும் முயற்சியிலீடுபட்டாலும், இவை நடைமுறையில் விடுதலையையும் சுயநிர்ணய உரிமையையும் கோருவதாக அமைந்த போதும் இந்தக் கோட்பாடுகளினதும் சம்பந்தம் இதற்கு இருக்கவில்லை.

சுருக்கமாகச் சொல்வதானால், சிங்களவர்களுக்கு நவீனத்துவம் தேவைப்படவில்லை. கீழைத்தேய, மேலைத்தேய புலமைத்துவ மாதிரிகளின் கூட்டு இணைவுகள், பொதுமைப்பாடுகளை (பெனடிக்ற் அன்டேர்சனுக்கும் அவரது வழி தொடரும் சிந்தனையாளர் முழுமைக்கும் எதிராக) உருவாக்குவது பற்றியும் அவர்களுக்குத் தேவையிருக்கவில்லை. இந்த அடிப்படைகளும், 20ம் நூற்றாண்டு வரை சிங்கள மக்கள் மத்தியில் நிலவிய வாய்மொழிக் கதை சொல்லும் முறையும் கவிதை மரபும் தொடர்ச்சியான ஒரு சக்தியாக இருந்து வந்ததும், 1815 - 18 இல் முழுத் தீவையும் பிரிட்டிசார் கைப்பற்றியதன் பின்னர் ஏற்பட்ட மாற்றங்களை மதிப்பிடும்போது கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

இந்த மாற்றங்கள் நியாயமானளவுக்குச் சிறப்பாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றைச் சுருக்கமாக இங்கே தருகிறேன்.

* அவர்கள் *இலங்கைத் தீவினை ஒன்றுபடுத்தும் செயலைச்* செய்தனர். அது வெறுமனே நிர்வாக அமைப்பு வடிவங்களூடானதாக மட்டும் அமையாமல், பெருமளவான வீதி அமைப்புகள், பாலங்கள், புகையிரதப் பாதைகள் மற்றும் தபால் தொடர்புகள் என்பவற்றினூடாகவும் அமைந்திருந்தது.

* அவர்கள் *முதலாளித்துவத்தின் நிறுவனக் கட்டமைப்பை* உருவாக்கினர். விசேடமாக, சொத்துரிமையைக் கொண்டுவருதல் கூலி உழைப்பு அசையக் கூடியதாகவும், எடுத்துச் செல்லப்படக் கூடியதாகவும் மாற்றப்படல், ராஜகாரிய முறை நீக்கப்படல் என்பன இந்தச் செயல்முறையில் மிகவும் முக்கியமான படிகள் ஆகும்.

* இந்த வளர்ச்சிகள் நிர்வாக மொழியாகவும் (உயர்) வர்த்தக (புறக்கோட்டை நீங்கலாக) மொழியாகவும் ஆங்கில மொழி வளர்ச்சி பெறுவதுடன் சம்பந்தப்பட்டவையாகின்றன. இதனால் ஆங்கிலம் இரு மொழி பேசுவோரிடையே ஒரு இணைப்பு மொழியாகப் பயன்படுத்தப்பட்டமை இதனுடன் சேர்ந்த ஒரு பரிமாணமாகும். (இது எல்லாக் காலனிகளிலும் நிலவிய ஒரு மாதிரியே தான்) இதனுடன் சேர்ந்த இன்னொரு பரிமாணமாக, நாம் காண்கிற ஒன்றுதான் ஆங்கில மொழி, வசதி வாய்ப்புகட்கும், மேலாதிக்கத்திற்கும், ஒடுக்குமுறைக்கும் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படத் தொடங்கியமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இந்த வளர்ச்சிகள், தோட்டத்துறைப் பொருளாதாரத்தை ஒரு பரிமாற்றச் செல்வாக்குக்குரிய செயல்முறையாக வளர்த்தெடுப்பதில் முன்னின்றது.

* இந்த வளர்ச்சிகளும் பிரித்தானிய (ஹொல்ட் ஹொரேவிற்ஸ் இன் சொல்லைப் பயன்படுத்துவதானால்) கூட்டமைவுத் திட்டங்கள், சிறிய சமூகங்கள் தமக்குரிய இடங்களைச் சமூக, பொருளாதார அமைவுக்கேற்ப ஏற்படுத்திக் கொள்ள வழிவகுத்தது.

* பறங்கியர், நிருவாக மற்றும் நீதித்துறை நிறுவனங்களில் இடைமட்டப் பதவிகளை நிரப்பிக் கொண்டனர். "ஜா" (மலே) இனத்தவர்கள் இராணுவத்திலும் பொலிசிலும் தொழில் பெற்றுக்கொண்டனர். "யோன்" (முஸ்லிம்) மக்கள் வர்த்தகர்களாகவும் ஏற்றுமதி இறக்குமதியாளர்களாகவும் மாறினர். செட்டியர்களும் இதே செயற்பாட்டில் இறங்கினர். அத்துடன் *முஸ்லிம் மூர்களும்* சேர்ந்து புறக்கோட்டை காசுச் சந்தையை நடாத்துவதூடாகக் குறிப்பிடத்தக்க அளவு பணத்தினைச் சேமித்துச் சக்தி கொண்டவர்களாயினர்.

* ஆரம்பத்திலிருந்து சில இலங்கைத் தமிழ் குடும்பங்கள் அவர்களுக்குச் சிறாப்பர்களாக இருந்த அனுபவத்தின் காரணமாக வங்கித் துறையில் முக்கிய இடைமட்டப் பதவிகளைப் பெற்றுக் கொண்டனர். 20ம் நூற்றாண்டில் (குறிப்பாக 1905ம் ஆண்டு கொழும்பு- யாழ். புகையிரதப் பாதை போட்டு முடிக்கப்பட்ட பின்) இலங்கைத் தமிழர்கள் பெருமளவுக்கு நிர்வாக சேவையில் சேர்ந்து கொண்டனர். கொழும்பிலும் அதன் சுற்றுப்புறத்திலும் நடந்த குடியேற்றங்கள் (அகராதியினர் நியம அர்த்தப்படி) இவர்களில் கணிசமான பகுதியினரைக் கொண்டதாக இருந்தது.

* புதிய ஒழுங்கு மலைப் பிரதேசத்தையும், முன்னைய கண்டிய மாகாணத்தின் மலைநாட்டு மாவட்டங்களை ஊடுருவியபோது, பிரித்தானிய சரக்குகளை ஏற்றிச் செல்லும் தூக்குவண்டிகளில் வர்த்தகத்திற்கும், முதலீட்டுக்கும் ஏற்பட்ட வர்த்தகத்திற்கும், முதலீட்டுக்கும் ஏற்பட்ட வாய்ப்புகளில் பங்கெடுத்துக் கொண்டவர்களில் கீழ்நாட்டுச் சிங்களவர்களும் அடங்குவர். இந்த முறைவழி ஒரு தயக்கத்தையும் கீழ் நாட்டு கண்டிய சமூகங்களின் தனித்துவங்களைக் கூர்மைப்படுத்துவதையும் உருவாக்கியது. 1924-25 இல் மத்திய மாகாணத்திலிருந்த சட்ட சபைக்கான இரு ஆசனங்களைக் கீழ் நாட்டு சிங்கள அரசியல்வாதிகள் பெற்றுக்கொண்டபோது, சில கண்டியச் செயற்பாட்டாளர்கள் அரசாங்கத்திற்கு[20] ஒரு சமஷ்டி ஆட்சி முறையைப் பிரேரணை செய்யவும் செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இவற்றை ஒட்டுமொத்தமாகத் தூக்கிப் பார்க்கும்போது இந்தச் செயல்முறைகள், ஒரு புதிய சமூக ஒழுங்கை "ஒரு உள்ளூர் பூர்ஷ்ஷுவா வர்க்கத்தினதும் அதன் உடன்பிறப்பான மத்திய தர வர்க்கத்தினதும் எழுச்சியும் உள்ளடங்கிய ஒரு சமூக ஒழுங்கை" உருவாக்கின.

* மத்தியதர வர்க்கக் கோட்பாடானது மேலாதிக்கம், மேற்தகமை என்பவற்றின் மாதிரிகளால் அவசியமான ஒன்றாக்கப்பட்ட இந்த தனிச் சொத்து செல்வம் குறித்த கட்டுப்பாடுகளைக் கொண்டதாக அமையவில்லை. ஆனால் வாழ்க்கை முறையும் ஆங்கில மொழியும் இந்த மாதிரிகளுள் உள்ளடங்கி இருந்தன. (உ-ம்: மேட்டுக்குடிப் பாடசாலைகளில் ஒருவர் தமிழ் அல்லது சிங்கள மொழியில் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டதில்லை)

* இந்த மத்தியதர வர்க்கம், பழைய உயர்குடியினர் அதாவது தமிழ், கண்டியன் மற்றும் கீழ்நாட்டுச் சிங்களப் பிரதேசங்களில் இருந்த, இன்னும் மறையாதிருந்த தலையாய குடும்பங்களை உள்வாங்கியதுடன் உள்ளடக்கியதாகவும் இருந்தது.

* பிரித்தானிய ஆட்சியுடன் இலங்கையர்கள் ஐரோப்பிய இலக்கிய மற்றும் அரசியல் செல்வாக்குக்கு [21] உட்பட்டவர்களாக மாறினர்.

* குறிப்பாக, சேக்ஸ்பியர் போன்ற கலாசார விக்கிரகங்களின், அப்போதைய வீரக் கற்பனைக் காவியப் படைப்பாளிகள் படைப்புகள்

* தேசியத்துவங்களும் நடைமுறைகளும்,

* மிதவாதம், குறிப்பாக அதன், பிரித்தானிய அரசியலமைப்புகளும் ஆங்கில வகையறாக்கள் ஜனநாயகக் கருத்துக்களை உள்வாங்குதல் குறிப்பாக வெஸ்ட்மினிஸ்டர் மாதிரிக்கு பாராளுமன்ற நிறுவனங்களுக்கு ஒரு மதிப்புக் கொடுத்தல் என்பவற்றில் ஒருவர் ஊறிப் போவதற்கு இது காரணமாக இருந்தது. காலனித்துவ காலத்திட்டத்தில் ஆட்சித் தலைவர், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட சபையின் வழிநடத்தலிற்குட்பட்டவராக இருக்க வேண்டும் என்னும் மிதவாதக் கோரிக்கை தேசியத் தன்மையைத் தவிர்க்க முடியாமல் வெளிப்படுத்துவதாக இருந்தது. (சட்ட சபை வெள்ளைக்காரர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டதாக இல்லாத பட்சத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிதவாதக் கோட்பாட்டின் ஒரு பகுதியும் அதன் வெளிப்பாடுகளும் ஆக அமைந்ததுதான் (மேன்முறையீட்டுக்கும் சாந்தப்படுத்தலுக்கும் எதிரான) *உரிமை பற்றிய பேச்சும்.* அது சமத்துவத்தையும் வலியுறுத்தியதும் இந்த அழுத்தம் பெண் விடுதலையையும் பெண்களின் வாக்களிக்கும் உரிமையையும் பின்னர் சேர்த்துக் கொண்டது.

மேலே நோக்கப்பட்ட சுருக்கமான முறைவழிகளின் அடிப்படையில் எங்களது மையமான அக்கறைக்குரிய ஒரு வளர்ச்சியை எடுத்துக் கொள்கின்றேன். இந்த மாற்றங்களின் விளைவாக ஆங்கில மொழியின் எழுச்சியுடன் 'இலங்கையர்' என்ற ஒரு கோட்பாடு உருவாதலை ஒருவர் அவதானிக்க முடியும். (இந்தப் பாவனை \ 'லாங்கிக்க' [22] என்ற புதிய சிங்கள அடைமொழியை உருவாக்கிற்று) பிரித்தானியர்களாலும் உள்நாட்டவர்களாலும் ஒரேவிதமாக அழைக்கப்பட்ட 'இலங்கையர்' என்ற பதம் ஒரு தேசியவாதத் தன்மையை ஆரம்ப காலத்திலிருந்து வளர்த்து வந்தது. குறிப்பாக Young Ceylon மற்றும் Ceylon Examinar என்ற பத்திரிகைகளின் பக்கங்களில் 1859 இலிருந்து இந்தச் சொல் பாவிக்கப்பட்டது. இந்த இரு பத்திரிகைகளும் பறங்கியரின் கட்டுப்பாட்டிலிருந்தது. இது, இலங்கையிலிருந்த சில பிரிட்டிஷ் பிரஜைகளின் இனவாதம் மற்றும் அத்துமீறல்களுக்குப் பதிலாக எழுந்த ஒன்றாகும். இந்த வகையில் இலங்கையர் தேசியவாதம் ஒரு முழுத் தீவினதாகவும் பல்லினத் தன்மையைக் கொண்டதாகவும் அமைந்திருந்தது. 20ம் நூற்றாண்டின் இறுதிக் கட்டம்வரை இலங்கை சிவில் சேவையை இலங்கை மயமானதாக மாற்றுவதற்கான கோரிக்கையில் (இது பறங்கியர், தமிழர் மற்றும் சிங்கள மத்தியதர வர்க்கத்தினரால் ஆதரிக்கப்பட்டது) இது தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்தது. இந்தச் சக்திகள் பின்னர் அரசியலமைப்பு ரீதியான அதிகாரப் பகிர்வுக்கான இயக்கத்தை 1900 இலிருந்து நடத்திவந்ததுடன் பின்னர் குணசிங்கவின் தொழிலாளர் கிளர்ச்சியினையும்[23] நடத்தி வந்தனர்.

கடந்த காலங்களின் பிம்பங்களால் பெரும்பாலான ஐரோப்பிய தேசியவாதங்கள் போஷாக்கூட்டப்பட்டு வந்ததைப் போல, இங்கேயும் தேசியவாதிகள் அனுராதபுர, பொலன்னறுவ போன்ற நகரங்களைக் கட்டியெழுப்பியவர்களது சாதனைகளினால் தூண்டப்பட்டவர்களாக இருந்தனர். இந்தப் பின்நோக்கிப் பார்க்கும் வீரகாவியப் பண்பு இலங்கைத் தேசியத்துக்குத் தத்துவார்த்தத் தயாரிப்புகளுக்கு மெருகூட்டும் ஒன்றாக அமைந்தது. கடந்த கால சிங்கள அரச சமூகத்தின் பெருமைக்குரிய நாகரீகமானது, தமிழர், சிங்களவர், பறங்கியர் மற்றும் பிற இனச் சீமான்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீமாட்டிகளின் இலங்கைத் தேசியத்தினைக் கட்டியெழுப்புவதற்கான வலுவான செங்கட்டியாக அமைந்தது. அருணாசலம் போன்ற தனிநபர்களுக்குக் கடந்த காலச் சாதனைகளால் தூண்டுதலைப் பெற முடிந்தது. (றொபெட்ஸ் 1979 - 226) டி. எஸ். சேனநாயக்க, மற்றும் எட்மன் றொட்றிகோ, எல். ஜே. டி. எஸ். செனிவிரத்ன, எம். ராஜேந்திரா, கே. கனகசுந்தரம் போன்ற நிர்வாகிகள் ராஜரட்டைப் பகுதியின் விவசாயத்தை 1930-1950 காலப்பகுதியில் மீளுருவாக்கம் செய்யும்பொது அவர்கள் கடந்த காலத்தினைப்[24] பற்றிய ஓர் உள்ளுணர்வுத் தூண்டுதலைப் பெற்றிருந்தார்கள் என்றே சொல்லவேண்டும்.

ஆங்கிலேயர்களாலும் இலங்கையர்களாலும் நாளாந்தம் பாவனையில் பயன்படுத்தப்பட்ட இலங்கையர் என்ற பதத்துடன் சேர்ந்து ஆங்கில மொழியில் வெளிப்படுத்தப்பட்ட இலங்கைத் தேசியத்தின் எழுச்சியானது, நான் சுட்டிக்காட்டியது போல, புதிய சிங்கள அடைமொழியான 'லாங்கிக்க' என்ற பதம் உருவாதலை ஊக்குவித்தது எனலாம். இந்தப் பதம் 19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பாவனைக்கு வந்தது. ஆனால் இந்த இடத்தில் ஒரு முக்கியமான வேறுபாட்டை நாம் கவனத்தில் எடுத்தாக வேண்டும். ஒருபுறத்தில் பெரிதும் மேற்கத்தைய மயமாகியிருந்த சிங்களவர்களும் சிங்களவர்களல்லாதவர்களுமான ஆங்கில மொழியில் இயங்கிய இலங்கையர்களின் பின்நோக்கிப் பார்க்கும் வீரகாவியப் பண்பு கொண்ட தேசியமும் மறுபுறத்தில், சிங்களம் பேசுவோரும், இரு மொழி அறிவுடையோர்களதும் தேசியவாத கருத்துருவாக்கம் சிங்கள மொழிக் கருத்தாடல்களினூடாக பேச்சுக்களினடியாக உருவானது என்பதும் தனித்தனியே வேறுபடுத்தி கவனிக்கப்பட வேண்டியவையாகும்.

பின்னையது நான் முன்னர் குறிப்பிட்ட (1) தொன்மை மற்றும் பாரம்பரியங்களையும் (2) முழுமையான சிங்கள அல்லது சிங்கள பௌத்த உணர்வினையும்: (3) அரசியல் உறவுகள் தொடர்பான உள்ளார் வெளியார் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் பார்க்கின்ற ஆழமாக உறங்கிக்கிடந்த புரிதல்கள் (கடந்த காலத்தைத் திரும்பிப் பார்க்கையில் சோழர்கள், பறங்கியர், போர்த்துக்கீசர்கள் பற்றிப் பேசுகையில் பொருத்தப்பாடாக அமைந்தது) போன்ற புலமைத்துவ அடித்தளங்களின் மேற் கட்டியெழுப்பப்பட்ட ஒன்றாகும். இதன் காரணமாக இந்த புதிய பதமான *'லாங்கிக்க'* என்ற சொல், சிங்கள பேச்சாளர்கள் மத்தியில் இலங்கையர் என்ற ஆங்கிலச் சொல் கொண்டிருந்த பல் இனப் பண்பைக் கொண்டிருந்ததா என்ற ஐயப்பாட்டைக் கேள்வியாக எழுப்ப விரும்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கேள்வி (அ)*

சிங்கள மொழி பேசும் மக்களின் எந்தப் பிரிவினர் மத்தியில், எந்த அளவுக்கு 'லாங்கிக்க' என்ற அடைமொழியானது வெளிப்படையாகவோ அல்லது பூடகமாகவோ, அது 'சிங்கள' என்ற அர்த்தத்துக்குச் சமமாகப் பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலமாக 'லாங்கிக்க' என்ற சொல் சிங்களத்திற்கு உள் அமைந்ததாகக் கொள்ளப்படுகிறது?

தர்மபால அவர்கள் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் 'இலங்கை வாலிபர்' களுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் "இலங்கையர்" என்ற சொல் தெளிவற்றவிதத்தில் சிங்களவர்கள் என்ற சொல்லை நோக்கி நகர்வதைக் காணக்கூடியதாக உள்ளது. உண்மையில் அவரது எழுத்தின் பெரும்பகுதி சிங்களவர்களது சீரழிவைத் திருத்துவதையும் மேற்கத்தைய மயமாகும் கூறுகளைக் கண்டிப்பதாகவும் அமைந்திருந்ததாலும், அது 'மண்ணின் மைந்தர்கள்' என்ற மதிப்பை சிங்கள பௌத்தர்களுக்கே கொடுத்தது என்பதைக் காணலாம். (1965 : 501- 44) இத்தகைய ஓர் அணுகலானது தீய தாக்கத்தைப் பின்னர் ஏற்படுத்தவுள்ள வேக வளர்ச்சியும் சக்தி வாய்ந்ததுமான ஒரு பலமான போக்கினைக் குறிப்பதாக அமைந்தது. 'சிங்களவர்கள்' என்ற அடைமொழியானது 'இலங்கையர்கள்' என்ற அடைமொழியைத் தன்னுள் வேண்டிய படிக்கு உள்ளடக்குவதாகப் பயன்படுத்தப்பட்டது.

8ம் நூற்றாண்டிலிருந்து 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையான நீண்ட வரலாற்றில் ஆங்கிலேயர் என்ற சொல் இதே அர்த்தத்தில்தான் பயன்படுத்தப்பட்டு வந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. 'ஆங்கிலேயர்' என்பதிலிருந்து 'பிரிட்டிஸார்' என்ற அடைமொழிச் சொல்லுக்கு எந்தவித எண்ணமும் இல்லாமல் ஒன்றுக்குப் பதில் இன்னொன்றைப் பாவிக்கும் விதத்தில் வழுவிப் போவதில் பல பிரித்தானியர்கள், (அவர்களில் சிலர் ஸ்கொட்லாந்தியர்களாக அல்லது வேல்ஸ், அயர்லாந்து போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்.) தங்களது காலத்தில் பெரிய பிரித்தானியா என்று அழைக்கப்பட்ட நிறுவனக் கூட்டமைப்பில் ஆங்கிலேயர்களுக்கிருந்த மேலாதிக்க இடத்தை அழுத்தமாகப் பதிய வைத்திருந்தனர்.

இவ்வகையில் உணர்வுத் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய இதே மாதிரியான ஒரு கோட்பாட்டு ரீதியான தவறான பொருத்தங்கள் இருந்ததை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்தக் காலத்தைச் சேர்ந்தவர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளம் காணப்பட முடியாதிருந்தாலும் இலங்கைத் தேசியவாதிகள் மத்தியிலிருந்த சிந்தனையாளரில் ஒரு பகுதியினர் இதை ஒரு முழுத் தீவுக்குமான, பல இனங்களையும் இணைப்பதான அர்த்தத்தில் பயன்படுத்த இன்னொரு பிரிவினர் 'சிங்களவர்' என்ற சொல்லுக்குச் சமமான அர்த்தத்தில் பயன்படுத்தி வந்துள்ளனர். இவ்விடத்தில் இந்த ஊகம் வலுவானதென்றும், இந்த இரு பகுதிகளிலும் சிங்களவர்கள் இருந்திருக்கிறார்கள் என்றும் (இன்னும் அந்த நிலைமை இருப்பது உண்மையே) வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

'இலங்கையர்' களை 'சிங்களவர்களாக' சமப்படுத்தும் பிரக்ஞையற்ற சமன்பாட்டை நோக்கிய போக்கானது 19ம் நூற்றாண்டிலும் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் நிலவிய சமூக, அரசியல் சூழலினால் வளர்க்கப்பட்ட ஒன்றாகும். கடந்த கால வரலாற்றிலும் சமகால ஒழுங்கினதும் மேலாதிக்கப் பண்புவாய்ந்த புரிதலை நோக்கி நகர்வதற்கான இந்தக் கருத்துக்களைக் கொண்டிருந்தவர்களையும் சிங்கள தேசியம் உருவாகி வளர்ந்து வந்ததற்கான ஊக்குதலைத் தந்த 5 செயல்முறைகளையும் குறிப்பிடலாம் என்று கருதுகிறேன்.

1. பௌத்த மதத்தினை நோக்கி மக்களை வென்றெடுப்பதற்காகவும் தமது மதத்தின் சீரழிவிற்கு எதிராகவும் கிறிஸ்தவ மதமாற்றும் முயற்சியை எதிர்த்த பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்துடன் இணைந்து நடந்த குறிப்பாக 1860இன் பின் நடந்த போராட்டம்.

2. 1980களிலிருந்து 1930 கள் வரை பௌத்த மக்களின் ஒரு பகுதியினருக்கும் கத்தோலிக்க முஸ்லிம் மக்களின் ஒரு பகுதியினருக்கும் இடையில் உள்நாட்டவர் மத்தியில் நடந்த ஆர்ப்பாட்ட எதிர்ப்புக்கள் (கூச்சலிடும் கலாசாரப் போராட்டம்).

3. சிங்கள செயற்பாட்டாளர்கள் மத்தியில் தமது கலாசாரமும் தமது மொழியும் மிகவும் மோசமாக வீழ்ச்சியடைந்து அழிந்துபோகும் அளவுக்கு மாசுற்றுவிடும் என்ற பயம் வளர்ச்சியடைந்து வந்தது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், பத்திரிகையாளர்கள், நாவலாசிரியர்கள், நாடக நடிகர்கள், கவிஞர்கள் மற்றும் துண்டுப் பிரசுரம் வெளியிடுவோர்கள் மத்தியில் கலாசார எதிர்ப்புக்கான ஒரு கடவுளின் அருள் சார்ந்த நோக்கு முன்வைக்கப்பட்டு வந்தது. (றொபேட்ஸ் 1994: 199-201). அக்காலத்தில் வந்த உரைநடை எழுத்துக்களின் கட்டுரைகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகையை வைத்துப் பார்க்கையில் பௌத்த மத்தைக் காப்பதற்கான[25] விடயத்தில் இருந்த அழுத்தத்தைவிட வலுவான அழுத்தம் இந்த விடயத்திலேயே இருந்திருக்கிறது.

4. இத்துடன் சேர்ந்து, பாரம்பரியம், வழமை என்பவற்றின் மீது ஒரு பலமான அழுத்தமும் கொடுக்கப்பட்டு வந்தது. பாரம்பரியம் பற்றிய வாசிப்புக்கள் எப்போதும் தேர்ந்தெடுக்கப்பட்டமையாக இருந்தன. உண்மையில் அவை பெரிதும் பூர்ஷுஜுவாத் தன்மை கொண்டவையாகவும் சிலவேளைகளில் மேற்கத்தய தன்மை கொண்டவையாகவும் இருந்தன. (அமுனுகம 1979, ஒபயசேகர 1979). ஆனால் செயற்பாட்டாளர்கள் இந்த வெளிச்சத்தில் தமது தெரிவுகளைக் கண்டு கொள்ளவில்லை.

5. இத்துடன் கூடவே சுதேசியம் தூய்மைவாதம் என்பவற்றுக்கும் ஒரு உறுதியான அழுத்தம் கொடுக்கப்பட்டு வந்தது. உதாரணமாக: (1) புலால் உண்ணலுக்கு எதிரான பிரசாரம், (2) சிங்களக் கிராமப் பெண்கள் சேலை அணிவதை வலியுறுத்திய பிரச்சாரம், (3) இனக் கலப்பு, கலப்புத் திருமணம் என்பவற்றுக்கு எதிர்ப்பு போன்றவற்றைக் கூறலாம். இவ்வகையில், எம். சீ. எவ். பெரேரா சிங்கள சஹோதர சமித்திய வில் 1910 யூலை 30ம் திகதி நிகழ்த்திய விளக்கங்களுடனான உரையை எடுத்துக்காட்டலாம். சிங்களவர்கள் மேற்கத்தைய வழியில் சென்று தமது குலசிரித், குணதர்ம (பாரம்பரியத்தையும் ஒழுக்கத்தையும்) என்பவற்றைத் தொலைத்து விட்டதனைத் தாக்கியதுடன், சில சிங்களவர்கள் பிரதேசின் (வெளிநாட்டார்) உடன் சேர்ந்து சிங்களவரை எதிர்க்கிறார்கள் என்றும், இன்னும் சிலரோ '*லன்சி, தெமிழ, இங்கிரிசி, ஜேர்மன், ஆதிபார ஜாதின்*" களுடன் மணமுடிக்கவும் செய்கிறார்கள் என்று குற்றம் சாட்டுகிறார். பெரேரா, '*சிஹலசமய*' என்ற பத்திரிகையின் ஆசிரியர் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இத்தகைய விமர்சனமும் சிந்தனையின் அமைப்பும் பியதாச சிறிசேனவின் ஆரம்பகால நாவல்களில் ஆதரிக்கப்படுவதைக் காணலாம். இவை மிகவும் தெளிவாக, மேற்குலக எழுத்துக்களிலிருந்து இங்கு வந்த எழுத்துக்களுடன் இலங்கைக்கு இறக்குமதியாக்கப்பட்ட வெளிப்படையான இனவாதக் கருத்துக்களும், சாதிய கருத்துக்களும் ஒன்றிணைந்து செல்வதை வெளிப்படுத்துவதாக அமைகின்றன. குறிப்பாக ஆரியர் - திராவிட வகையீடுகளை எதிரெதிராக வைத்துப் பேசுகின்றன. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், சாதிய கருத்துக்கள், மீளுருச் செய்யப்பட்டு, ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இனம் தொடர்பான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடுகளுடன் இணைக்கப்பட்டு சிங்கள உலகம், சிங்கள கலாசாரம் என்பவற்றின் எல்லைகள் உட்செல்ல முடியாதவற்றுக்கான தடைகளைக் கட்டியெழுப்புவதன் மூலமாக உருவாக்கப்பட்டன. (பார்க்க, றொபேட்ஸஜ்ம் பிறரும் 1989 : 1) இத்தகைய ஓர் ஆய்வின் மூலமாகப் பெற்ற அடிப்படைகளிலிருந்து விசேடமாக சிறிசேனவின் மூன்று ஆரம்பகால நாவல்களின் உள்ளடக்கம் பற்றிய ஆய்விலிருந்தும் நான் 1989ல் People inbetween இல் உருவாக்கிய (வரைபடம் பக்கம் 23) வரைபடம் அதே வடிவில் இங்கேயும் பயன்படுத்தப்படுகிறது.

பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டு காலத்தில் வெளியான யுத்தகாலக் கவிதைகள், இந்தக் கருத்தமைப்பு அடிக்கடி தமது பிரதிநிதித்துவத்துடன் அடிக்கடி வெளிப்பட்டிருப்பதை காட்டுகின்றன. 16ம் நூற்றாண்டின் பின்னர் போர்த்துக்கேயரதும் அவர்களது ஏகாதிபத்திய சக்தியாலும் சிங்கள மக்கள் முகம் கொடுக்க வேண்டி இருந்த ஒடுக்குமுறை கொள்ளை என்பவற்றுடன் ஒப்பிடுகையில் இத்தகைய ஒரு போக்கு ஒன்றும் ஆச்சரியத்தை தருகின்ற ஒன்றல்ல. குறிப்பாக, இந்தப் போர்க் கவிதைகள், மற்றையவர்களை அச்சமூட்டுகின்றவற்றின் ஒரு பட்டியலை வெளியாரின் பட்டியலில் சேர்த்துவிட முடியும் என்று காட்டுகின்றன. இந்தப் பட்டியலில் *துப்பாசியும் காப்பேரி* (காப்பிரி) யும் கூட இடம்பெற்றிருந்தனர். இவர்கள் முறையே ஆசிய-ஆபிரிக்க வம்சாவழியைச் சேர்ந்தவர்களும் காபிர்களும் அல்லது ஆபிரிக்க வம்சாவழி வந்த கறுப்பர்களுமாவர். இலங்கையில் சிறிசேன 2ம் *காராவை* (கலப்பு) அதாவது *துப்ப ஹி* யை ஒரு இனத்துவக் குழுவாகப் பாவிப்பது 19ம் நூற்றாண்டுக் கண்டுபிடிப்பல்ல. இதையடுத்து, பிலிப் குணவர்த்தன, டபிள்யூ. எஸ். கருணரத்ன மற்றும் பிற '1956 புரட்சியின்' கருத்துநிலைவாதிகள் சிறிசேனவின் நாவலை (சிலவேளைகளில் போர்க் கவிதைகளையும் எடுத்திருக்கக்கூடும்) அன்றைய இலங்கைச் சமூகத்தை ஆதிக்கம் செலுத்தி வந்த ஆங்கிலம் பேசும் வர்க்கமும், ஐ. தே. க.வின் மேற்கத்தைய மயமான பழுப்பு நிற *சாஹிப்புகளையும் துப்பாஹி* என்ற பதத்தால் இகழும்போது பாவிப்பதற்கு அடிப்படையாகக் கொண்டிருக்கக் கூடும்.

*கேள்வி* **(ஆ)**

இந்தப் பின்னணியில் இத்தகைய நடைமுறைகளை வைத்துப்பார்க்கையில் *'லாங்கிக்க'* என்ற சொல் 19ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த சிங்கள செயற்பாட்டாளர்களுக்கும் அவர்களது உரைகளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டவர்கட்கும் என்ன அர்த்தத்தைக் கொடுத்திருக்கும்? அல்லது *'லாங்கிக்க'*, என்ற சொல்லின் வெளிப்படையான, உள்ளார்ந்தமான அர்த்தங்களாக நாளாந்த எழுத்தில் பயன்படுத்தப்படுபவை என்ன?


குத்து மதிப்பாக சொல்வதானால் *'லக்வாசி'* என்ற பதம் 'சிங்கள' இன் மத்தியகால பண்புகளை வெளிப்படுத்தியதுடன் இன்று எல்லா (நிரந்தரமான அல்ல தேசிய) வாசிகளையும் குறிப்பதாக அமைகிறது என்று நான் சிபாரிசு செய்கிறேன். ஆனால், *'லாங்கிக்க'* என்ற சொல்லை ஒரு முழுமையையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சொல்லாக பயன்படுத்துவதில் எனக்கு நிச்சயமற்ற தன்மை இருக்கிறது. லாங்கிக்க, சிங்கள என்ற சொற்களை, நாளாந்த பாவனையில் உபயோகிக்கும் சிங்களம் பேசுவோர், சமப்படுத்தப் பாவிக்கும் ஒரு போக்கையும் இன்னும் சொல்வதானால் *லாங்கிக்க* என்ற சொல்லை *சிங்கள* என்ற சொல்லுக்குள் உட்படுத்திப் பாவிப்பதையும் காணலாம்.

19ம் நூற்றாண்டில் மாக்கிய மேட்டுக்குடி 'ஹங்கேரியர்'ரை தமது 'மாக்கியர்', என்ற கோட்பாட்டுள் அடக்கியதற்கும் 18ம் நூற்றாண்டில் 'பிரிட்டிஸ்' ஐ 'இங்கிலீஸ்' உள்ளெடுத்துக் கொண்டது போலவே இதுவும் நடந்தது.[26]

இந்தக் கேள்விக்கு நான் பதில் கூற முடியாது. ஏனென்றால் நான் சிங்கள மொழியிலான உரையாடலை நாளாந்த அடிப்படையில் எடுக்கவில்லை. அகவே இதைச் சிங்கள மக்கள் மத்தியில் சிங்களத்தில் அவர்களது நாளாந்த வாழ்வில் எடுத்துச் செல்பவர்களிடம் விட்டுவிடுகின்றேன். சிங்கள பேச்சின் முக்கியத்துவத்துடன் நான் தொடங்கிய இடத்தில் இதை விட்டுவிடுகின்றேன். நான் விளக்கிச் சொல்ல விரும்புகிற விடயம் என்னவென்றால், எந்த வாழ்க்கை முறையை நாங்கள் ஏற்படுத்திக் கொண்டாலும், 'லாங்கிக்க' என்ற சொல் ஒரு பன்மைத்துவ அர்த்தத்தைக் கொண்டதாயும் அது இந்நாட்டிலுள்ள எல்லா இன மத பிரிவுகளைச் சேர்ந்த மக்களையும் உள்ளடக்குவதாயும் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கள உலகக் கண்ணோட்டத்தில் அமைப்புக் கோட்பாடாக உள்ளே - வெளியே




1. கிடைப்பாங்கான வரிகள் அதிகார அடுக்கு கோட்பாட்டை கொண்டுள்ளன: மேலுள்ளவர்கள் மேலானவர்கள்
2. தொட்ட என்பது துறைமுகத்தையும் வெளியாருக்கான எல்லையை பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் உள்ளது.
3. அ - சிங்கள அல்லது சிங்களவர் அல்லாதவர்கள், பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து பரீட்சார்த்த ஒழுங்கில் இருந்த போதும் குடிப்பரம்பல் பொருளாதார காரணிகளுக்காக பின்வருவோர் சேர்க்கப்படவில்லை. மலாயர்கள் (பொதுவாக முஸ்லிம்களுடன் இணைத்துப் பேசப்பட்டனர்) கொழும்புச் செட்டிகள், போரர்கள், இந்திகள், செட்டிகள், காபிர்கள், சீனர்கள், ஆப்கானிஸ்யர்கள்.

-றொபேட்டும் பிறரும்: People inbetween தொ.1 Ratmalana: Sarvodaya 1989: P20

## 20ம் நூற்றாண்டின் ஆரம்பகாலம்: இலங்கையர் தேசியத்தின் முதன்மை

எனது உரையின் மீதான அழுத்தமானது என்னைப் பிரிட்டிசாருக்கு முந்திய காலத்திலிருந்து 19ம் நூற்றாண்டுவரையும் அதன் பின் சமகால நிலை வரையும் என்னை வேகமாக ஓட வைத்துவிட்டது. ஆயினும், முடிவில் நான் எழுப்பிய கேள்வியானது, 1956க்கும் அதற்குப் பிறகும் ஏற்பட்டு வந்த மாற்றங்கள் தொடர்பான உசாத்துணைகள் இன்றி முழுமையாகக் கிரகித்துக் கொள்ளப்பட முடியாது. இதைப் புரிந்து கொள்ள 20ம் நூற்றாண்டின் முற்பகுதியின் சமூக, அரசியல் நிலைமைகளை ஒருவர் கிரகித்துக் கொள்ள வேண்டும். கூடவே 1956 இன் பின்னால் நின்று இயங்கிய சக்திகள் என்ன சவால்களை வெளிப்படுத்தின என்பதையும் கிரகித்துக் கொள்ள வேண்டும்.

இந்த விடயத்தை வேறு வார்த்தைகளில்,[27] சில பகுத்தாய்வுப் பண்புகளுடன் வலியுறுத்த விரும்புகிறேன். 1956 இன் பிறகு, அதிலிருந்து யார் யார் எதைப் பெற்றுக்கொண்டார்கள் என்பதைப் புரிந்துகொள்வதற்கு முன்னைய அரை நூற்றாண்டு காலப்பகுதிகளில் யார் எதைப் பெற்றிருந்தார்கள் என்பதைத் தெரிந்திருந்தால் மட்டுமே முடியும். இங்கேயுள்ள சுருக்கமான முடிவு என்னவென்றால், பலமிக்க இந்த தென்பகுதி மாவட்டங்களில்[28] இருந்த 1956 இன் அன்றைய சக்திகள்:

1. எல்லா இனக் குழுமங்களையும் சேர்ந்த, கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட ஆங்கிலம் பேசும் மேற்கத்தைய இயல்புக்குள்ளாகிவிட்ட மேட்டுக்குடியினரை ஒரு வாய்ப்பு வசதி பெற்றவர்களாகக் கருதப்பட்ட குழுவினர்.

2. பிரித்தானியர்களின் பொருளாதார நலன்கள் குறிப்பாக தேயிலை, றபர், இறக்குமதி ஏற்றுமதி வியாபாரம் மற்றும்.

3. போரர்கள் (Borahs), சிந்திகள், செட்டிகள், சில சமயங்களில் மேமன்கள், முஸ்லிம்கள் போன்ற பிரித்தானியர்களினால் உருவாக்கப்பட்ட பொருளாதார ஒழுங்கின் லாபங்களை அனுபவிப்பவர்களாகக் கருதப்பட்ட சமூகங்கள்.

4. இலங்கைத் தமிழர்கள் (நடைமுறையில் யாழ் தமிழர்கள்) அரசாங்கத்தில் உள்ள அதிகப் பெறுமதிவாய்ந்த உத்தியோகங்களை[29] பெற்றிருந்த அளவு அவர்களுக்குரிய இன விகிதாசார அளவுக்கு மேற்பட்டதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. சிங்களவர்கள், பாரத இனத்தவர், தமிழர், பறங்கியர்கள் மற்றும் பிற இனக்குழுக்களைச் சேர்ந்தவர்களும் அவர்கள் கிறிஸ்தவர்கள் என்பதால் தம்முள் தொடர்புகளையும் உறவுகளையும் கொண்டிருந்ததும். இதன் காரணமாக இவர்கள் பல்லினத் தன்மை கொண்ட ஒரு தனியான அணியாக இருந்ததுடன், தம்முள் மதம் சார்ந்த ஒரு வலைப்பின்னலைக் கொண்டிருந்தனர் என்றும் இதனால் அவர்களால் உயர் மதிப்புள்ள தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதற்கும் முக்கிய இடங்களுடன் தொடர்பு கொள்வதற்கும் உரிய செல்வாக்கைக் கொண்டிருந்தார்கள் என்றும் நம்பப்பட்டனர்.

6. பௌத்த மதம் இந்த நாட்டு மக்களின் பெரும்பான்மையோரது மதமாகவும் உயர் நாகரீகமடைந்ததும், வரலாற்று நிதியாக மிகவும் உன்னதமான மதமாகக் கணிக்கப்படுகின்றதுமாக இருந்த போதும் இந்தத் தீவின் பௌத்த மதத்திற்கு உரிய அழுத்தமோ தகுதியோ வழங்கப்படுவதில்லை.

7. நடைமுறையில் பொதுவாகப் பிரதேச மொழிகளுக்கும் குறிப்பாகச் சிங்கள மொழிக்கும் வழங்கப்பட்ட சிறப்பு மற்றும் கௌரவம் என்பவற்றிலிருந்த குறைபாடு.

பௌத்த மதம், சிங்கள மொழி என்பவற்றின் மீது கொடுக்கப்பட்ட முக்கியத்துவமானது வெளிப்படையான ஒரு கலாசார மீளுருவாக்கத்துடன் இணைந்தே வெளிப்பட்டு வந்தது. இவை குறிப்பிடத்தக்க அளவுக்கு தமக்கேயுரிய சுதேச தூய்மைவாதப் போக்கு ஒன்றினைக் கொண்டிருந்தது. இந்தப் போக்கின் ஒரு வெளிப்பாடுதான்,[30] பொருத்தப்பாடு குறித்த அழுத்தமாகும். மத ஆடைகளில் செய்யப்பட்ட புதுமைகளில் காணப்பட்ட ஓர் அடையாளச் சின்னம் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்தச் சுதேசியமும் பொருளாதாரத் தேசியவாதமும் 1956 உடன் சேர்க்கப்பட்டதற்கு (JVP) ஜனதா விமுக்தி பெரமுனவினால் அதன் முதலாவது ஆட்டத்தின் போதும் (1965-71) மூன்றாவது ஆட்டத்தின் போதும் (1987-90) பயன்படுத்தப்பட்டதைக் காணலாம். நான் வேறொரு இடத்தில் சுருக்கமாகச் சொன்னது போல, ஜே.வி.பி.யினர், 1956இன் பிள்ளைகளும் அதேபோல பழைய, மாவோயிஸ்ட்டுக்கள் மற்றும் சேகுவராயிஸ்டுக்களின் பிள்ளைகளுமாவர். அதாவது, அவர்கள் இரண்டு சக்திவாய்ந்த தத்துவார்த்தப் போக்குகளின் கூட்டிணைப்பிணைக் கொண்டிருந்ததுடன் *மாரிக்ஹெறல்ல, குவேரா, மாவோ* ஆகியோரால் வழங்கப்பட்ட மேலதிக திரிப்புகளையும் சேர்த்துத் தமதாக்கிக் கொண்டவர்களாக இருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிரவும், 1956 சக்திகளால் வெளிப்படுத்தப்பட்ட பண்பாட்டுத், தேசியவாதம், பல்லினத் தன்மை கொண்டதும் 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து ஆதிக்கம் செலுத்தி வந்ததும் 1948இல் சுதந்திரத்தைப் பெறுவதற்கான அரசியலமைப்பு ரீதியான அதிகாரப் பகிர்வுக்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வந்ததுமான இலங்கைத் தேசியத்தை, வெளிப்படையாக இல்லாவிட்டாலும் உள்ளமையாக சவாலுக்கழைப்பதாக அமைந்திருந்தது. இதுதான் மையம். 1956 இலும் அதற்குப் பின்னர் ஏற்பட்ட செயல்முறை மாற்றங்கள், இலங்கைத் தேசியவாதத்தின் பலம் குறைந்துவருவதை வெளிப்படுத்தியதுடன் தீவிரமான சிங்கள, தமிழ் தேசியவாதங்களால் இது இடம்பெயர்ப்பதற்குமான சாட்சியாய் உள்ளன. இந்த நிலை இவ்விரு தேசியவாதங்களையும் முரண்பட்ட நிலையில் வளர்வதற்கு உரமாய் அமைந்தது எனலாம். இதன் விளைவு என்னவென்றால், இன்று இலங்கைத் தேசியவாதம் என்பது ஒரு பலவீனமான, ஒதுக்கப்பட்ட சக்தியாக ஆகிவிட்டது. ஆயினும் இறக்கவில்லை.

இலங்கை, லங்கன் தேசியம், அதன் பலத்திலும் தகுதியிலும் 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அது கொண்டிருந்த தலைமைத்துவ மட்டத்திற்கு மாறான ஒரு நிலையில் நிற்கிறது. 20ம் நூற்றாண்டின் நிலைமைகளைப் பற்றிய சுருக்கமான ஒரு வரைபைத் தருவது அப்போது ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிப் புரிந்து கொள்ள உதவும் என்று நம்புகிறேன்.

முதலிலேயே, நிறுவன ரீதியான அதிகாரமானது அதன் பல பரிமாணங்களிலும் பிரிட்டிசாரிடமே இருந்தது என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அதாவது, ஆங்கில மொழியின் மேலாண்மை நிலை காரணமாக அதிகாரம் அவர்களிடமே இருந்தது. கூடவே, அதிகாரம் பிரிட்டிசாரின் கைகளுக்குள் இருந்ததைக் கேள்வி எழுப்பியவர்களும், அந்த நிலமைக்குச் சவால் விட்டவர்களும் ஆங்கில மொழித் தேர்ச்சி உடையவர்களே என்பதையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். இந்தியாவில் சிலர் செய்தது போல புரட்சிகர வன்முறை எதிர்ப்பைக் காட்ட முன்வந்தவர்களைத் தவிர ஆங்கில மொழித் தேர்ச்சி பெற்றவர்களே பிரிட்டிசாரை எதிர்த்தனர். (உண்மையில் இந்த வன்முறை எதிர்ப்பைக் காட்டியவர்கள் இந்த உபகண்டத்தில் தனித்துவமான ஒரு கீழ்மட்ட அணியாகவே இருந்தனர்). மேற்கத்தைய கல்வி கற்றவர்கள், குறிப்பாகச் சட்டத்தரணிகள் மத்தியிலிருந்துதான் (பெரும்பாலும் ஆண்கள்) பிரிட்டிஷாரின் கொள்கைகளில் மாற்றம் கொண்டுவர வேண்டுமென்றும், சுதேசிகட்கு அதிகளவு பிரதிநிதித்துவம் வேண்டுமென்றும் கிளர்ச்சி செய்பவர்கள் உருவாகினார்கள். (றொபேட்ஸ். 1978)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு செயற்பட்ட பெரும்பாலானவர்களும் கூட மேட்டுக்குடியினர் சென்ற அதே பாடசாலைகளில் படித்தவர்களாயும், அவர்களது பொழுதுபோக்குக் கழகங்களில் உறுப்பினர்களாகவும் இருந்தனர். சொந்தம், சாதி மற்றும் இனத்துவச் சார்பு நிலைகளும் போட்டிகளும் அங்கும் நிலவிய போதும், அங்கே ஒரு கருநிலைப்பட்ட வாழ்க்கை முறையொன்று பொதுவாக இருந்ததால் அது ஒரு பொதுமைப்பண்பை உருவாக்கியதுடன் ஒரு பொதுவான தேசபக்திக்கு வலுவூட்டுவதாக அமைந்திருந்தது. இந்தத் தொடர்புகள், தீவின்மீது 1850 முதல் 1970 வரை மேலாட்சி செலுத்திவந்த மையமான கொழும்பில் இருந்தே தொடங்கின. இந்தப் போக்குகளுக்குப் பலமூட்டும் துணை சேர்ப்பவையாக இருந்தவை அன்றைய சக்திவாய்ந்த பொதுசன அபிப்பிராயத்தைக் கொடுத்துவந்த ஆங்கில மொழிப் பத்திரிகைகளாகும்.[31] அன்று விமர்சன பூர்வமான கலந்துரையாடலுக்கும், 'சதிக்கும்' உரிய இடங்களாக இருந்தவை: (1) ஹல்ஸ்ட்ரொப் இலுள்ள சட்டத்துறையினரின் அலுவலகப் பகுதிகள் (The leagal corridors of Hulfsdrop), (2) ஓறியன்ற் கிளப் (Orient Club) (3) மத்திய தரவர்க்கத்தினரின் வரவேற்பறைகள் மற்றும் (Middle Class drawing rooms) (4) பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கை சமூக சீர்திருத்தச் சங்கம் (Ceylon Social reform Society) (1905?-11) இலங்கைப் பாவணைப் பொருள் மறுப்புச் சங்கம்(The Ceylon total abstinence Society) (1911? - 1911) இலங்கை சீர்திருத்த அணி (Ceylon reform league)(1917-19) இலங்கைத் தேசிய காங்கிரஸ் (Ceylon National Congress) (1991 -51) மற்றும் லங்கா மகா ஜனசபா என்பவையாகும்.

அதிகளவிலான அதிகாரத்திற்காக அழுத்தம் கொடுத்ததன் மூலமாக இந்த மத்தியதரவர்க்க மேட்டுக்குடியினர், சந்தேகத்திற்கிடமின்றி தமக்கும், தமது சொந்தங்களுக்கும் மேலதிக செல்வாக்கையே எதிர்பார்த்தனர். ஆனால், அவர்களது வேலைகட்குக் காரணமாக இருந்த தத்துவார்த்த அர்ப்பணிப்பும், ஏகாதிபத்திய எதிர்ப்பையும் நாம் புறக்கனித்துவிட முடியாது. அன்றைய ஒரு சில செயற்பாட்டாளர்கள் பெரும் செல்வமும், உள்ளூரில் பெருமளவு செல்வாக்குக் கொண்டவர்களாகவும் இருந்தனர். அவர்கள் நினைத்திருந்தால், அன்று அதிகாரத்தில் இருந்த பிரித்தானிய நிர்வாகிகளின் [32] சொத்துக்களை வாங்கியிருக்கவே முடியும். சிறப்பான வாழக்கை வாழ்ந்த குடும்பங்களுடன் ஒப்பிடுகையில், இவர்களின் செயற்பாடுகள் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன.

அவர்களது ஆங்கில மொழித் தேர்ச்சியும், இந்தச் செல்வம், அதிகாரம் என்பனவும் சேர்ந்து இந்த மேட்டுக்குடியினரின் இலங்கைத் தேசியவாதத்தை அன்றைய சிங்கள மேட்டுக்குடிகளின் உறுப்பினர்களதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தர்மபால போன்றவர்கள்), இடைத்தர மேட்டுக்குடியினரும் வெளிப்படுத்திய சிங்கள தேசியவாதத்தை விட செல்வாக்கு மிக்கதாக்கியிருந்தன. பியதாச சிறிசேன இந்த மேட்டுக்குடியினரின் நிகழ்ச்சிகளின் தளபதியாக விளங்கினார்.[34] எம்.சி.எம். பெரேராவை ஒரு சில புலமையாளர்களே இன்று அறிவர். ஆனால், பெரும்பாலானோர்க்குப் பரிச்சயமான பெயர்கள் டி.ஆர். விஜயவர்தன, ஈ.டபிள்யூ.பெரேரா என்பவையே. தர்மபால, பெரும் செல்வந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்த போதும், 20ம் நூற்றாண்டின் முதல் மூன்று தசாப்தங்களிற்கும்[35] சிலாபத்தைச் சேர்ந்த கொரியா குடும்பத்தை விடவும் அவர்களது முன்னணி மத்திய தரவர்க்க வட்டங்களில் செல்வாக்குக் குறைந்தவராகவே இருந்தார்.

சிங்கள மக்களின் நலன்களை வெளிப்படுத்துவதில், அரசியல் செயற்பாட்டாளர்களாக இருந்த தர்மபால, சிறிசேன, ஜோன் டி சில்வா ஆகியோர் மத்திய தரவர்க்கத்தின் ஆதரவைப் பொறுத்தவரை உயர்ந்த மட்டத்தில் இருக்கவில்லை என்ற உண்மையுடன் தொடர்ந்து மோத வேண்டியிருந்தது. 20ம் நூற்றாண்டில் இந்தியாவில் இருந்தது போல, ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் நலனுக்காகக் குரல் கொடுப்பது என்பது 'வகுப்புவாதம்' என்று கொள்ளப்பட்டது. 'வகுப்புவாதம் என்பது ஒரு மோசமான சொல்லாக, இன்று மேற்கில் 'இனவாதம்' என்று அழைக்கப்படும் சொல்லுடனும் ஆசியாவில் 'பேரினவாதம்' என்று அழைக்கப்படும் பதத்துடனும் இணைந்த ஒன்றாகக் கருதப்பட்டது. தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் மத்தியிலிருந்து வந்த செயற்பாட்டாளர்கள் 1910 முதல் 1940 வரையான காலப்பகுதியில் விசேட தொகுதிகளைக் கோரி அழுத்தம் கொடுத்த தம் இனம் சார்ந்த கூட்டிணைப்பில் கவனம் செலுத்திய வேளைகளிலும் மோசமான முறையில் பழித்துரைக்கப்பட்டார்கள். 1930களில் இடதுசாரி இயக்கத்தின் வருகையும் கூட இந்தப் பழித்தலுக்கான இன்னொரு குரலாக அமைந்தது (அவர்கள் அதிகாரப் பரவலுக்கான இயக்கத்தை நடாத்திய உள்ளூர்ப் பூர்ஷுவாக்களை இழித்துரைத்தபோதும்).[36]

1930 இன் நடுக்கூறில் பண்டாரநாயக்காவும் அவரது சகாக்களுமாக சிங்கள மகா சபாவை (SMS) வைத் தொடங்கிய போது, இதைத் தொடங்கியதன் காரணமாக 1950 வரை, இந்தப் போக்கை தற்காத்துக் கொள்பவர்களாக இருந்தனர். 1939, 40 களில் 'சிங்களத் தேசியவாதத்தை' 'சமூகங்களுக்கிடையே நட்புறவை' உருவாக்க அவசியமான ஒரு செங்கல் என்று வர்ணித்து அதை வளர்த்தெடுத்த பண்டாரநாயக்கா தனது பேச்சுக்களின் போது சிங்களவர்கள் முதலில், சிங்களவர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிணைக்க வேண்டும் என்று வாதிட்டார். இத்தகைய வாதம் ஒன்று வெளிப்படையாகச் செய்யப்பட வேண்டிய அவசியம் ஆரம்பத்தில் நிலவியதற்குக் காரணம், சாதி, மதம், மேல்நாடு, கீழ்நாடு வேறுபாடுகளை உடைத்து ஒரு ஒருமையை உருவாக்க வேண்டியிருந்தது தான். (றொபேட்ஸ் 1994: 254, 1976 : 556) உண்மையில் அவர் பிராந்தியப் பிளவுகளை உடைக்கும் விதத்தில் ஒரு யுத்த தந்திர ரீதியான திருமண உறவை யுத்தத்தை குடும்பத்துடன் ஏற்படுத்தியும் கொண்டார். (இது ஒரு கண்டிய அரசகுடி தொடர்புள்ள குடும்பமாகும்.)

## 1956 உம் அதன் மாற்றங்களும்[38]

1956 உடன் சம்பந்தப்பட்ட சக்திகளின் பிரதானமான தாக்கம்[39] என்ன என்பது மேலே உள்ள பகுதியில் பருமட்டாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே நான் நிறுத்தியிருந்த இடத்துடன் இதை இணைக்கலாம் என நினைக்கிறேன்.

பண்டாரநாயக்காவும் சிங்கள மகா சபையும் ஒத்த கருத்துக் கொண்ட ஏனையோரும், 1940 காலகட்டத்தில் பின்னணியிலேயே இருந்தார்கள். அவர்களுக்கு மத்தியதர வர்க்க அரசியல் வட்டங்களிடையேயோ, இடதுசாரித் தீவிரவாதிகள் மத்தியிலேயோ எந்தச் சட்டபூர்வ அந்தஸ்தும் இருக்கவில்லை. ஆக, 1956 சக்திகள் சாதித்தது இதுதான். அவர்கள் சிங்கள கலாசார உணர்ச்சியை சட்டபூர்வமாக்கி, அன்றைய சூழ்நிலையை மாற்றியமைத்தார்கள். அதுவரை 'வகுப்புவாதம்' ஆக இருந்தது. அப்போது முதல் 'தேசியவாதம்' ஆகியது. இந்த மாற்றம் வெறுமனே இதை நம்பியவர்கள், இதைப் பேசியவர்கள் மத்தியில் மட்டுமல்லாது, இதன் பார்வையாளர்களாக இருந்த ஒரு விவசாயினதோ, கேனரினதோ, கொடிகாரவினதோ பார்வையிலும் கூட அப்படித்தான் ஆகிப் போனது.

இந்த சட்டபூர்வமாக்கல் ஒரு பகுதியார்க்கே உருவாக்கப்பட்டது என்று சொல்ல வேண்டும். ஏனென்றால் சி. ல. சு. க. தலைமையிலான ம.எ.பெ. (MEP) 1956 தேர்தலில் பெற்ற பெருவெற்றியானது, பிலிப் குணவர்த்தனா தலைமையிலான இடதுசாரிக் கட்சியொன்றை உள்ளடக்கியதாகவும், சோசலிச சுலோகங்கள் முழக்கப்பட்டதாலும் உருவான ஒன்றாகும். இது ஒரு வசதி வாய்ப்பற்ற மக்களின் இயக்கமாகப் பார்க்கப்படும் ஒன்றாகவே இருந்தது. சோசலிசமானது பொருளாதாரத் திட்டங்களைக் கடந்து மேலே போய், குறிப்பிட்ட சில நிறுவனங்களை விசேடமாக அந்நியருக்குச் சொந்தமானவற்றைத் தேசியமயமாக்கும் அளவுக்கு வளர்ந்து சென்றது. மொழிச் சீர்திருத்தத்திற்கான குரலானது, பொருளாதார சிக்கல்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதாகவும், ஜனநாயகத் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் அமைந்திருந்தது. இன்னொரு விடயம் என்னவென்றால், இந்தப் பெரு வெற்றியின் தன்மையும் பல்வேறு *'அப்பே ஆண்டுவ'* (எங்கள் அரசாங்கம்) போன்ற குறியீட்டு வடிவிலான வெளிப்பாடுகளும் இந்த மாற்றத்தின் ஜனநாயகத் தன்மையை அழுத்தித் தெரிவித்தன. மொத்தத்தில், இந்த முழு இயக்கமும் பெரும்பான்மையினரின் ஏற்புடமையைப் பெற்றுக் கொண்டது. அதாவது, 'சிங்களவராயிருத்தல்' என்பது 'சிங்களத் தேசியவாதமாகச்' சட்டபூர்வத் தன்மை பெற்றது (றெபேட்ஸ் 1994: அத். 10)

1956இன் சக்திவாய்ந்த சட்டபூர்வமாக்கும் செயல்களின் வளர்ச்சியானது எப்படி வஞ்சகத் தன்மையான தாக்கங்களைப் புலமைப்பரிசில்கள் மீது கொண்டிருந்தது என்பது பின்னர் வெளிப்பட்டது. 1956 சக்திகளின் அரசியல் தாக்கத்தைக் கொண்டாடும் விதத்தில் 1970இல் எழுதப்பட்ட கட்டுரை ஒன்றில் ஷெல்டன் கொடிகார, 'சிங்கள தேசத்தின்' துன்பங்களைப் பற்றியும் சிங்கள தேசியவாதம்' பற்றியும் பேசும் அதேவேளை, போகிற போக்கில் தமிழ் பற்றிப் பேசும் போது 'தமிழ் வகுப்புவாதத் திட்டம்' (1970: 100-03) என்று எழுதியுள்ளார். இந்தச் சொற்றொடரைப் பாவித்தது பற்றி எந்த விதமான பிரதிபலிப்பும் இன்றிச் சொல்வதானால், இது அத்தகைய ஒரு நோக்கத்துடனேயே பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

இந்தச் சொற்றொடரை இன்று சிங்கள ஆணைக்குழு மிகவும் வெளிப்படையாகப் பயன்படுத்துகிறது. சி. ல. சு. க. உம் ஐ. தே. க. வும் பாராளுமன்றம் பெரும்பான்மைக்காக, வகுப்புவாதக் கட்சிகளில் தங்கியிருப்பதாக அவை குற்றம் சாட்டுகின்றன. அவர்கள், 'வகுப்புவாதிகளும் அந்நிய சக்திகளும்' - என்று அடுத்தடுத்தாக வைத்துச் சொல்லும் முக்கிய நிலைப்பாடு இது. நாட்டில் ஒற்றுமை இன்மையை வளர்ப்பதாகக் குற்றம் சாட்டுகின்றனர். அத்துடன் இன்றைய சிங்களத் தலைவர்கள் தேசபக்தி அற்றவர்களாகவும் இந்த நாட்டின் வரலாறு பற்றி அறியாதவர்களாயும், இந்த மண்ணுடன் பின்னிப் பிணைந்த பௌத்த விழுமியங்கள் பற்றிய எந்த உணர்வும் அற்றவர்களாகவும் இருக்கிறார்கள் என்று குற்றம் சாட்டுகின்றனர். (1999:12)

அர்த்தங்களைக் காணவேண்டிய வாசிப்பு ஒன்று இங்கு ஓரளவுக்கு அவசியமாகிறது. ஆனால், இத்தகைய கருத்துக்கள் இன்று நிலவும் சிங்கள கலாசார தேசியத்துடன் சம்பந்தப்பட்ட ஒரு பெரும்பான்மையின் நியாயப்படுத்தலை வெளிப்படுத்துகின்றன. சிங்கள ஆணைக்குழு போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புக்களினால் வெளிப்படுத்தப்படும் நியாயங்களின் பகுதியாக வெளிப்படையாகவோ அல்லாமலோ இது இருந்து வருகிறது என்று நான் கருதுகிறேன். ஆனால், மொத்தச் சிங்கள மக்களின் தொகையும், பிராந்திய அதிகாரமும் சம்பந்தப்பட்ட பூகோள அரசியல் நிலைமையை நீண்ட கால வரலாற்றுச் சட்ட அடிப்படையில் பார்க்கும் போது பல சிங்களத் தேசியவாதிகள், இதற்கான ஒரு மரபார்ந்த பெரும்பான்மைப் பலத்தின் சாத்தியம் குறித்து ஐயத்துடனேயே உலகை எதிர்கொள்கின்றனர். அத்துடன் பல புலமையாளர்கள், தாம் ஒரு சிறுபான்மை உணர்வு படைத்த பெரும்பான்மையினராக உள்ளதாக வலியுறுத்துகின்றனர்.

இந்தக் குற்றச்சாட்டு வேண்டியளவுக்கு அடிக்கடி எடுத்துக் கூறப்பட்டுள்ளதால், அதைத் திரும்பவும் எடுத்துக் கூறுவது தேவையில்லை. இது ஒன்றும் 1990 களில் வந்த புதிய போக்கு அல்ல. 1960 களின் ஆரம்பக் காலத்தில் சிங்கள பண்பாட்டுத் தேசியவாதம் அதன் உச்சக் கட்டத்தில் இருந்த போதும் ஒரு பாராளுமன்ற உறுப்பினரால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. "சிங்களவர்கள் திராவிடத்தினுள் ஒரு சிறுபான்மையினராக உள்ளனர். அவர்கள் திராவிடப் பெரும்பான்மைக்கு எதிராக, தமது இருப்புக்கான போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (கேர்ணி 1973:164) இந்தப் பயங்கள் அரசியல்வாதிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டவை அல்ல. புலமையாளர் பெருமளவுக்கு அளவிடப்பட்ட தொனியில் பேசினாலும், அவர்களும் இந்த விடயத்தில் குடிகொண்டிருந்தார்கள். சங்கரன் கிருஷ்ணாவின் அண்மைய தமிழ் நாட்டு அரசியல் தொடர்பான ஆய்வொன்று கே. எம். டி. சில்வா உட்பட்ட எமது வரலாற்றாசிரியர்கள் தமிழ் நாட்டின் பிரதான அரசியற் கட்சிகளின் அரசியல் திட்டத்தையும் இந்தியாவின் திராவிட பிரிவினை வாதத்தையும் முழுக்க முழுக்கத் தவறாகவே கற்றிருக்கிறார்கள் என்று வெளிப்படுத்துகிறது. ஆனால், இந்தத் தவறான வாசிப்புக்களும், அச்சங்களும் உண்மையாக நிலவுவதுடன் கணக்கிலெடுக்கப்பட வேண்டியவையாயும் உள்ளன. இன்றைய இலங்கையின் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான சிங்களவர்கள் 1990 இலும் தென்னிந்தியப் பூச்சாண்டியை ஓர் அச்சமூட்டும் ஆபத்தாகவே நம்புகின்றனர். (இப்போது மிகவும் உண்மையான அசல் பூச்சாண்டி பா. ஜ. க. ஆக இருக்கலாம்).

1956 மாற்றங்கள் தமிழ் அரசியலிலும் தீவிர மாற்றங்களை ஏற்படுத்தின. தமிழ்த் தன்மை என்பது தமிழ் தேசியவாதக் கோட்பாட்டுத் தன்மையைப் பெற்றுக்கொண்டது. சிலவேளை 1945 சில கம்யூனிஸ்ட் கட்சியினால் வெளியிடப்பட்ட இந்தக் கருத்தினால் தூண்டப்பட்டு இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகியிருக்கலாம். இதை 1949ல் சமஸ்டிக்கட்சி (தமிழரசுக் கட்சி)[40] மேலும் முன்னெடுத்துச் சென்றது. ஆனால், சமஸ்டிக் கட்சியானது ஓர் இரண்டாம் தரக் கட்சியாக இருந்ததுடன் 1992ல் தேர்தலில் சொற்பளவு வாக்கையே பெற்றது. இந்தக் கட்டத்தில் 1965ல் சிங்களம் மட்டும் குரலானது, சமஸ்டிக் கட்சியை ஒரு ஆதிக்கம் பெற்ற தமிழ்க் கட்சியாக உயர்த்தியது. யாழ்ப்பாணத் தமிழர்கள், சிங்களம் படிப்பதற்கான நோக்குடன் உருவாக்கப்பட்ட திட்டங்களைக் கைவிட்டார்கள். சுருக்கமாகச் சொல்வதானால், தமிழ் சிங்கள தேசியவாதங்களின் நிலைப்பாடுகளும் அணிசேர்க்கைகளும் இரண்டினதும் எதிர்த்துருவ மட்டங்களுக்குச் சென்றதுடன் ஒன்றின் வளர்ச்சிக்கு இன்னொன்று தீனி போடுவதாக அமைந்தது.

இரண்டு பிரிவு மக்களதும் பரந்த குடியமர்வின் தன்மையும், அவர்களின் தொகையும், விகிதாசாரமும் குறிப்பாக அவர்களிடையேயான இடையூடாட்டத்திற்கும், முரண்பாடுகள் தோன்றுவதற்கான சூழலைத் தருவதாகவும் அமைந்திருந்தன. இதனைத் தான் நான் பூகோள அரசியலில் உள்ள குடிசனத் தொகை அம்சம் என்ற கோட்பாட்டமைவினால் குறிப்பிடுகின்றேன். வடக்கு மாவட்டங்களில் தமிழர்கள் செறிந்து வாழ்கின்ற தன்மையும் குடாநாட்டை அவற்றின் மேலாதிக்க மையமாகக் கொண்டு கிழக்கு மாகாணத்தின் தென்பகுதியில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்வதும் அரசியல் பலத்திற்கான ஒரு வளமாகவுள்ள அதேவேளை, பிராந்திய உரிமை கோரலுக்கான ஒரு அடிப்படையாகவும் அமைகின்றன. இவர்களின் தொகையானது அதிகாரத்துக்கு உதவுகிறதாயினும் இவை தொடர்புபடுத்தியும், குடிப் பரம்பலின் தன்மை குறித்த கவனிப்புடனும் விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். உண்மையில், இலங்கையில் உள்ள தமிழர்கள் மலேசியாவிலுள்ள சீனர்களை விடவும், அவர்கள் அங்குள்ள சனத்தொகையில் 32 சதவீதத்தைக் கொண்டிருந்த[41] போதும் அதிகளவு பலமான தளத்தைக் கொண்டுள்ளனர். இந்த உரிமை கோரல்களை ஒழுங்குபடுத்தவும் அவர்களுக்கு அவற்றை வழங்குவதற்கும் 1947 - 1977 வரையான காலப்பகுதியில் நிறுவனச் சட்டங்களாலும் பாராளுமன்ற தேர்தல்களாலும் செய்யக் கடினமான ஒன்றாக அமைந்துவிட்டன. தேர்தற் தொகுதி முறை கொண்டுவரப்பட்ட பின்னர் முதல் நடந்த தேர்தல்கள், விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தன்மை அற்றவையாக இருந்தமையால், ஒரு சிறிய வீதாசாரமான வாக்குகளின் அதிகரிப்பே பிரதான கட்சிகளுக்குச் சிங்களப் பெரும்பான்மைத் தொகுதிகளில் பெருமளவு பெரும்பான்மையைப் பெற்றுக் கொடுத்தன. தமிழர்கட்குச் சலுகைகளை வழங்குதல் என்பது, இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல்வாதிகளுக்கு தற்கொலைக்குச் சமமான ஒரு விடயமாக மாறிற்று. சுருக்கமாகச் சொல்வதானால் (முஸ்லிம்களிடமிருந்து வேறாகத் தமிழருக்கு தனித்துவமான) சலுகைகள் வழங்கப்படுவதற்குத் தொடர்ச்சியான ஒரு தயக்கம் இருக்கவே செய்தது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், ஜனரஞ்சகத் தளத்துக்கோ, தீவிரப் பேரினவாத நிலைப்பாட்டுக்கோ சிங்களவர்கள் மத்தியில் எந்தத் தயக்கமும் இருக்கவில்லை. இது தமிழ் மக்களை ஆரம்பத்தில் யாழ்ப்பாணச் செயற்பாட்டாளர்கள் மேலாதிக்கத்தின் கீழ் தீவிரமான துருவ நிலைப்பாடுகளுக்குச் செல்லுவதற்கு தூண்டுவதாய் அமைந்தது.

தவிரவும், அதிகாரப் பரவல் முறையிலான முயற்சிகளுக்கு எதிரான விதத்தில் கடும் போக்காளர்களின் நிலைகளை நோக்கியமைந்த நிர்வாகக் கட்டமைப்புக்களுக்கும் அப்பால், குறிப்பிடத்தக்க அளவுக்கு சிங்கள மக்கள் மத்தியிலான ஒரு பகுதியினரிடையே இயல்புநிலை ரீதியான தடை இருந்ததையும் நாம் கவனிக்க வேண்டும் என நினைக்கிறேன். இக்கட்டுரையின் நோக்கமானது, இந்த முறையிலான சிந்தனைக்கு ஆதரவு தரும் விதத்தில் அமைந்த வரலாற்று ரீதியான நிலைப்பாடுகளைச் சுட்டிக்காட்டுவதாகும். எனது முடிவுகள் வெளிப்படையான மற்றும் பூடகமான வெளிப்பாடுகள் இரண்டிலும் தங்கியுள்ளது. அதிகாரப் பரவலாக்கல் மூலமான சலுகைகளை வழங்குவதில் உள்ள தயக்கமானது, நான் நினைக்கிறேன், வரலாற்று ரீதியான பிரக்ஞை மற்றும் சிங்கள கலாசாரத்தின் பாரம்பரியத்திற்குக் கொடுக்கும் முக்கியத்துவம் என்பவற்றால் ஏற்படுத்தப்பட்டுள்ள முடிவுகளிலிருந்துதான் எழுகின்றன. குறிப்பாக *தம்மதீப, சிஹலதீப* கருத்துக்கள் மிகவும் ஆழமாக சிங்கள மக்களின் சில பகுதியினரின் சிந்தனைகளில் வேரூன்றியுள்ளதாக நான் சந்தேகிக்கின்றேன். இந்தச் சிந்தனைகள் மக்களை இன்னமும் ராஜரட்டை சிந்தனையில் மூழ்கிப்போய் இருக்கவும், நாட்டை சிங்கள மக்களின் பூமி எனக் கருதவும் தூண்டுகின்ற அளவில் நின்றுவிடுகின்றன. யதார்த்த நிலைமையானது அந்த யுகத்தைத் தாண்டி ஏன் கண்டிய யுகத்தையும் தாண்டி இன்று பல்லின பல கலாசார நிலைக்கு வந்த பின்னும், அவர்கள் அங்கேயே நின்று கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் காரணங்களுக்காவோ அல்லது பிற இயல்பு ரீதியான அல்லது வேறு பொருளாதாரக் காரணங்களுக்காகவோ 1940 களிலிருந்து (அதற்கு முன்பிலிருந்து இல்லை என்றால்) சிங்களப் பகுதியிலிருந்து வந்த, எல்லா விதமான சலுகை வழங்கும் விதத்திலான முன்மொழிவுகளும் அவை சிங்களவர்களின் இன்றுள்ள நிலைமையை மோசமாக்குமென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்க்கப்பட்டதுடன், சிறுபான்மையினரின் மேலதிகக் கோரிக்கைகளையோ பிரிவினையையோ முன்வைக்கும் நிலைக்குத் தள்ளக் காரணமாக அமைந்தன. விளக்கத்திற்காக நான் அத்தகைய ஒரு சம்பவத்தை எடுக்கிறேன். 1950க்கும் அதற்குப் பிறகும் வந்த ஜனரஞ்சக அரசியலுக்கு முந்திய தென்றபடியால் இது மிகவும் முக்கியமான அதிகம் விளக்கம் தரக்கூடிய ஒன்றாக அமையும் என்று நான் கருதுகிறேன். சம்பவம் நடந்தது 1940இல். இலங்கை தேசிய காங்கிரசின் தலைவர் என்ற விதத்தில் ஜி. சி. எஸ் .கொரியா, சில இலங்கைத் தமிழ் தலைவர்களுடன் புதிய சமரச நடவடிக்கையின் ஓர் அம்சமாக ஒரு கலந்துரையாடலை நடாத்தினார். இந்தப் பேச்சுவார்த்தைத் திட்டம் உடனடியாக டி. ஆர். விஜேவர்த்தனவாலும் அவரது பத்திரிகையாளர்களாலும் கடுமையாகத் தாக்கப்படும் ஒரு விடயமாக மாறிற்று.[42]

"அதிகளவு ஆசனங்கள் என்பது அதிகளவிலான கோரிக்கைகட்கு இட்டுச் செல்லும். இதனால் வகுப்புவாதப் பசி இன்னமும் அதிகரிக்கவே செய்யும். பிரித்தானிய ஆட்சியாளர்கள் இந்திய மக்களை நோக்கி தமது வேறுபாடுகளை ஒழுங்கமைத்துக் கொள்ளும்படி கேட்டபோது, அவர்கள் வெறுமனே சிறுபான்மையினர் தமது விலையை அதிகரித்துக் கொள்ளவே தூண்டினர்."[43] இந்த வகையான பேச்சு இதன் பிறகும் திரும்ப வந்தது. பண்டா - செல்வா ஒப்பந்தம் 1960 களில் வந்த மாவட்ட சபைத் திட்டம், 1981இன் பிராந்திய யோசனைகள் எல்லாமே, பல சிங்கள செயற்பாட்டாளர்களால், இவை தமிழர்கள் பிரிந்து செல்லவே வழிவகுக்கும் என்றே விமர்சிக்கப்பட்டன. இந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெளிப்பட்ட கூச்சல் என்னவென்றால் தமிழர்களின் கோரிக்கை மேலும் அதிகரிக்கும் என்பதுதான்.

ஆனால், இன்று 1999இல் நின்றபடி பார்க்கும் போது, தெளிவாக மிகத் தெளிவாகத் தெரிவது என்னவென்றால், இந்த மறுப்புக்கள் ஒவ்வொன்றும் பிரதான தமிழ்க் கட்சிகளினால் வெளிப்படுத்தப்பட்ட ஒன்றிணைப்புடன் அவர்களைப் பலத்துடன் எழுந்து நிற்கவே உதவியுள்ளன என்பதுதான். உண்மையில் இவர்களில் பலர் தமது 'இலங்கையர்' என்ற தன்மையைத் தூக்கி எறிந்துவிட்டனர். அவர்களது தேசியமானது இலங்கை குடியரசின் கீழான ஒரு பகுதி தேசியவாதம் என்ற நிலையிலிருந்து ஒரு தனியான தேசியவாதமாக மாறிவிட்டுள்ளது.

சில தனிப்பட்ட அவதானிகள், இன்றைய இலங்கைக்குள் இரண்டு தேசங்கள் [44] உணர்வு பூர்வமாக உருவாகி இருப்பதை மறுக்கக் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் தமிழ் பகுதியின் கட்சிகளில் மிகவும் பலமானதும், கொடுமையானதுமான புலிகள் இயக்கம் அரசுக்குள் ஓர் அரசை ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக நடத்தி வருகிறது. (தவிரவும் தமிழ் மக்களின் அரசுக்குச் சேவையாற்றுவதற்கும், தமிழர்கட்கும் அவர்களது விடுதலைச் செயற்பாட்டுக்கும் உதவ ஒரு சர்வதேச நிறுவனமாகவும் இது தொழிற்படுகிறது).

ஆகவே, அதிகாரப் பரவலாக்கம் நாட்டைப் பிரித்துவிடும் என்று சிங்களச் செயற்பாட்டாளர்கள் சொல்வது எனக்கு வியப்பையே தருகிறது. அவர்களால் இன்று நாட்டில் உருவாகியுள்ள முழு அளவிலான பிளவை இனங்கண்டு கொள்ள முடியவில்லை. ஆகவே அவர்கள் முடிவான, சட்டபூர்வமான, நீதியான பிரிவினையைக் கருதுகிறார்கள் போலும். ஆனால், இது அனேகமாக அவர்களது சிந்தனைக்கான ஒரு வெளிப்பூச்சாக மட்டுமே இருக்க முடியும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், இங்கே வேறு சில ஆழமான விடயங்கள் இருக்கின்றன. இலகுவில் விளங்கிக் கொள்ளப்பட முடியாத, ஆனால், கட்டாயம் விளங்கிக் கொள்ளப்பட வேண்டியவை அவை.

தர்க்க பூர்வமாகப் பேசுவதால், நான் கேட்கிறேன்:

இன்று எதிர்ப்புக் குரலெழுப்புபவர்கள், கடந்த காலத்தில், அவர்கள் முற்றாக மறந்துவிட்ட கடந்த காலத்தில், தொடர்ச்சியாகத் தமிழர்கட்குச் சலுகைகளை வழங்கத் தயாரற்று இருந்த போக்கு, அவர்களைப் பிரிவினையை நோக்கித் தள்ளவே வழிவகுத்தது என்பதைக் காணமுடியாமலா இருக்கிறார்கள்? அத்துடன் இது சிங்கள மக்களின் நிலையை மேலும் மோசமாக்கியதை ஏன் காணவில்லை? திரும்பிப் பார்க்கையில் அது தெளிவாகவே தெரிகிறபோதும், ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

யதார்த்த நிலையை அதிகம் வற்புறுத்துதல் பற்றி எனது மானிடவியற் பயிற்சி என்னை எச்சரிக்கிறது. அதேவேளை, அது மனிதர்களை அவர்களது சொந்தப் பதங்களினூடாக விளங்கிக் கொள்ளுவதற்கு என்னை எப்போதும் ஊக்குவிக்கிறது. ஆகவே ஒரு அவதானி என்ற முறையில் இந்தச் சிக்கல்களைக் கடந்து சென்று, தேசியவாதிகள் அல்லது பேரினவாதிகள் இன்றைய உலகைப் பார்க்கும் விதத்திலுள்ள நியாயங்களையும் உணர்வுகளையும் கண்டுகொள்வதே என் முன்னாலுள்ள பிரச்சினையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற் குறிப் புகள்

1. இந்தக் கட்டுரை எழுதுவதில், டிப்பேஸ் சக்கரவர்த்தி, எம்.மஹ்ரூப், ஜி.ஒபேசேகர மற்றும் உஸ்வத்த ஆராச்சி ஆகியோரின் அபிப்பிராயங்களும் பயன்பட்டுள்ளன.

2. இத்தகைய துருவ நிலைப்பாடுகளை பொதுவாக 'பேரினவாதம்' என்பார்கள். அதாவது அதே மாதிரியான கூட்டமைப்பினைப் பற்றிய வெளிப்படையான முன் தீர்மானங்களும், சகிப்புத்தன்மை குறைவான போக்கும் கொண்டிருத்தலை இச் சொல் குறிப்பிடுகிறது. அதாவது, பேரினவாதம், மற்றவர்களை கீழ்மைப்படுத்தும் நிலையையும் தனது குழு உயர்வானது என்ற நிலையையும் உருவாக்கும் போக்கை சார்ந்து நிற்கிறது.

3. ஒபேசேகர 1995 - 243, பிராயோகிக்க சிங்கள சப்தகோஸ கொழும்பு 1982, தொ.1 பக். 720, உம் ஜாதிய தொடர்பாக 719உம்

4. 19ம் நூற்றாண்டு முழுவதும் இனம், தேசிய இனம் அல்லது (தேசியம்) என்ற சொற்கள் பிரித்தானியரால் ஒன்றுக்கொன்று மாற்றிக் கொள்ளக் கூடியவிதத்தில் பாவிக்கப்பட்டு வந்துள்ளன. ஆனால், 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஒரு வேறுபாடு உருவாகி உறுதிப்பட்டுக் கொண்டது. இருந்தபோதும், கடந்தகால மானிடவியலாளர்களின் நடைமுறைகளை ஏற்று, அவுஸ்திரேலியாவிலுள்ள சுதேசிகளல்லாதோர் இனம் என்ற அர்த்தத்தில் தேசியத்தைப் பயன்படுத்துவதை காணமுடியும்.

5. பிரித்தானியாவில் நடக்கவிருந்த 2000 ஆண்டு போட்டிக்கு முன்பாக, அவுஸ்திரேலியாவின் சிறந்த வெளிப்படைப் பேச்சாளர்களில் ஒருவரான வர்ணே, அருச்சுன ரணதுங்கவுக்கு எதிரான தனிப்பட்ட விமர்சனங்களை வெளியிட்டார். இதற்குப் பதிலளித்த அருச்சுன, இலங்கையின் '2000' ஆண்டு கால வரலாற்றுடன் ஒப்பிட்டு, அவுஸ்திரேலிய மூதாதையரின் குற்றமிழைத்த வரலாற்றைப் பற்றி சூசகமாகத் தாக்கினார். அவுஸ்திரேலியாவிலுள்ள தமிழர் சங்கங்களின் கூட்டமைப்பு இதனை இனவாதம் என்று கண்டித்தது (இணையத் தளத்திலும் பிற வெளியீடுகளிலும்)

6. சண்டகோமி கோப்பிர ஹேவாவுடனான தனிப்பட்ட உரையாடலிலிருந்து.

7. தகவல்கள் எல்.என்.டி.பீரிஸ், விமல் வீஜேரத்ன, பி.பி. மீகாஸ்கும்புற, ஆனந்த திஸ்ஸகுமார ஆகியோரிடமிருந்து எடுக்கப்பட்டது. அத்துடன் பார்க்க கொடக்கும்புற 1955:8, 155, 211, 211, 243, 327.

8. இந்தப் பெயர்கள் எல்லாம் இக்காலகட்டத்தின் சிங்கள இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் இவை ஒவ்வொன்றும் முழு தீவையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பனவாக அமைந்தன. பாவனையிலுள்ள ஒரு நீண்ட பெயர்ப் பட்டியலில் சில. (பார்க்க பின்னிணைப்பு (அ)) இவை பாளி, சமஸ்கிருதம் ஆகியவற்றின் தன்மை கொண்டவையாக சிங்கள எழுத்துக்களில் வந்து சேர்கின்றன.

9. பார்க்க ஒபயசேகர 1995

10. தனிப்பட்ட அபிப்பிராயங்களாக சாள்ஸ் அபயசேகர, கே.பி.ஏ. எட்மன்ட் ஆகியோரால் சொல்லப்பட்டவை. அத்துடன் ஹட்டன் கவி (பார்க்க அ.கு. 11, 14) பற்றிய எனது வாசிப்பினால் உறுதிசெய்யப்பட்டது.

11. பொதுவாக படித்த கவிதைகள் என்று மொழியாக்கம் செய்யப்பட்ட இவை ஆண்மை அல்லது சக்ய பாவய கே.பி.ஆ எட்மண்ட்டின் உரையாடலில் இருந்து பற்றிய கவிதைகளாகும். பறங்கி ஹட்டன என்பது ராக சிங்க 11இன் பாலியல் வீரியத்தையும் அவரது இராணுவ ஆற்றலையும் பற்றியதாகும்.

12. 'ஆபாசத் தமிழர்கள்' அல்லது சூனிய, அச்சமூட்டும், கட்டுக்கடங்காத தமிழர்கள் பல்வேறு புலமையாளர்களின் கருத்துக்களிலிருந்து (ஒபயசேகர 1993) 152, பீரிஸ் 1909: சென்றன், 31, 385 தம்மதாச 1992: 46 - 7) இது `சாதி' என்ற சொல் மீதான பன்முகப்பட்ட தாக்கத்தைக் குறிப்பதாக அமைகிறது - அகராதிகள் இந்த இரு அர்த்தங்களையும் ஒரு நீண்ட பட்டியலில் தருகின்றன. (பிரயோகிக்க சிங்கள சப்தகோசய, கொழும்பு 1984, தொ. 2 1767, சோரட்ட 1926: 1035.

13. முதல் இரண்டு கூறுகளும் தென்னிந்தியாவிலிருந்து வந்தவை. காபேரி ஆபிரிக்க கறுப்பர்களையும் துப்பரி ஐரோப்பியர்களுக்கும் ஆசியக் கறுப்பர்களுக்கும் இடையில் தொழிற்பட்ட தாசர்களின் வம்சாவழியினர்.

14. இந்த யுத்தக் கவிதைகளின் சம்பவங்கள் தொடர்பான எனது வியாக்கியானங்களும், அவற்றின் தொடர்புகளும், ஆர்.பீ.மீகாங்கும்புற, சுமண சேகர பண்டா, ஜே.பி.திசாநாயக்க, சந்தாஸ், சங்கோமி கேப்ரசேனா, தர்ஷனி குணத்திலக்க, றோஹினி பரணவிதான, கே.பி.ஏ.எட்மண்ட், சி.ஆர்.டி.சில்வா, சிறிநாத் கணேவத்த, ஆகியோருடனான உரையாடலின் உதவியுடன் உருவானவையாகும். ராஜகாரிய என்பது கட்டாய உடலுழைப்பை குறிக்கிறது.

15. கொட்றிஸ்டன் 1909: றொபேட்ஸ் 1982: அத் 2: ராஜவாலிய 1954: 82: உம், பண்டாநாயக்காக்கள் பற்றிய ஜேம்ஸ் ரட்ணம் அவர்களின் பரம்பரையியல் ஆய்வு.

16. பறங்கி ஹட்டன. ப:37 உம் இங்கிரிஸி ஹட்டன ப. 10, 18.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. இந்தச் சொற்தொகுதி, சிங்கள மக்களுக்கே உரியதாக இருப்பது குறைவு என்பதை இங்கே வலியுறுத்திச் சொல்ல வேண்டும். சீன உலகப் பார்வையானது காட்டுமிராண்டிகளை அவர்களின் எல்லைகட்கு அப்பால் எதிர்க்கும் அர்த்தத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டதாகும். 18ம் நூற்றாண்டின் ஆங்கில செயற்பாட்டாளர்கள் ஒரு சுயசார்பு நிலைப்பாட்டை எடுத்து, தமது மேல்தட்டுவர்க்கமானது பிரெஞ்சு படிக்கும் வழக்கங்களை நோக்கி நழுவிச் செல்கின்றது என்ற ஒரு பிரஞ்சு நாட்டுக்கெதிரான பேரச்சத்தை வெளிப்படுத்தினர். (கியூமன் 1987)

18. லெகி ஸ்ரோஸ் தொடர்பான எனது புரிதல் எம் ஹெனா.. 1998 (விசேடம்) அத்:1 இலிருந்து பெறப்பட்டது.

19. இக்கட்டுரையின் முன்னாலுள்ள சில அடிக்குறிப்புக்கள் எழுதிக்கொண்டிருக்கும் ஒரு நூலின் அடிப்படையில் அமைந்தவை. குறிப்பாக சிஹலே அல்லது திரிசிஸ்ஹலயே அல்லது கண்டிய அரசு என அறியப்பட்ட அரசு தொடர்பான ஆறு அத்தியாயங்களின் அடிப்பபைடயில் இது 'Sinhala Conciousness in time and peace என்ற நூலின் பகுதியாகும்.

20. போத்துக்கீசர், டச்சுக்காரர் காலத்து கண்டிய அரசின் அரசியற் செயற்பாடுகட்கு பாட்டரட்டவின் மக்கள் ஆதரவு செலுத்தி வந்தனர். அதிலும் அவர்களுக்கு அதிகமாக டச்சுக்காரருடன் தொடர்பு இருந்தது. கண்டிய சிங்களவர்கட்கும், கீழ் நாட்டு சிங்களவர்கட்கும் இடையிலான தனித்துவங்களுக்கு முரணாக, 1840 முதல் 1930 வரையான காலப்பகுதியில் தம்முன் ஒரு எதிர்ப்பு நிலையை உருவாக்கி இருந்தார்கள். ஏனென்றால், கண்டியப் பகுதிகளுக்கு தோட்டப் பொருளாதாரத்திற்காகச் சென்ற சுரண்டும் வர்க்கங்களின் கீழ் நாட்டுச் சிங்களவர்களும் இருந்தார்கள். 1924 - 25 தேர்தல் முடிவுகளுக்கு பார்க்க றொபேட்ஸ் 1969.

21. இந்த சக்திகள் பற்றிய விமர்சனத்திற்கு பார்க்க: றொபேட்ஸ் உம் பிறரும் "1989 யனெ றொபேட்ஸ் 1979.

22. வெளித் தோற்றத்தில் ஷலாங்கிக்க' என்ற சிங்களச் சொல் பல்லினத் தன்மை கொண்டதாகவும், இந்த நாட்டின் 'சுதேசிகள்' என்று கருதப்படக் கூடிய சகல மக்களையும் உள்ளடக்கியதாகவும் இருப்பது உண்மைதான். ஆனால், இது மிகவும் ஊருடுவி ஆராயப்பட வேண்டிய ஒரு பகுதியாகும். லாங்கிக்க என்ற சொல் 'இலங்கையர்' என்ற சொல்லை உள்வாங்கிக் கொண்டு விட்டதா? அது 'லக்வசி' என பிரித்தானியருக்கு முந்திய காலத்து சொல்லின் அர்த்தத்தை எடுத்து 'சிங்களவர்' என்ற சொல்லுடன் பதிலியாகப் பயன்படும் ஒரு சொல்லாக மாறிவிட்டதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. விரக்தி நிலவிய ஆண்டுகளில், குணசிங்க, வெளிநாட்டு தொழிலாளர்கட்கு எதிராக 'வகுப்புவாதக் குரலை' எழுப்பத் தொடங்கினார். ஆனால், இங்கே சொல்லப்படுகிற விடயம் என்னவென்றால், குணசிங்கவின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பிரசாரப் பேச்சுக்கள் அவரது தொழிலாளர்களின் நலன்களுக்கு அனுசரணையான பங்களிப்பிணைச் செய்தன என்பதுதான்.

24. என்னுடைய அபிப்பிராயங்கள் ஒருபகுதி லொட்றிகோ, செனவிரத்ன, ராஜேந்திர, ஜீ.எல்.டி. டேவிட்சன் ஆகியோருடனான நேர்காணல்களின் ஞாபகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. ஆனால், பார்மரின் 'பயனய பிரசன்ட் கொலனைசேசன்'- கேம்பிரிட்ஜ் 1957, என்ற நூலையும் கவனத்தில் எடுக்க வேண்டும். இந்த நூலானது கவர்ச்சிகரமான விதத்தில் அன்றைய புலமையாளர்கள் மற்றும் தமிழ் பேச்சாளர்கள் மத்தியில் நிலவிய போக்கான 1960களை 1930, 40களாக பார்க்கின்ற போக்கின் ஒரு பகுதியாக நடந்த காலனித்துவ கொள்கைகள் தொடர்பான விவாதங்களின் போது பயன்படுத்தப்பட்டுள்ளது.

25. இது சிங்களப் பத்திரிகைகளில் 1901-1915 காலகட்டத்தில் வெளியான எழுத்துக்களிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சிலவற்றை அடிப்படையாகக் கொண்டது. குறிப்பாக பார்க்க: (அ) 'சிங்கள ஜாதி பிரிஹிமா' என்ற தலைப்பில் கே.பி. சுமனசேகர ஸ்தாவிராவினால் 'சிங்கள பௌத்தய'வில் எழுதப்பட்ட தொடர், நவம்பர் 21,1914 (ஆ) 'ரட்டே திபென அவுல், அபட வேதுவுள்' என்ற 'சிங்கள ஜாதிய' வில் வெளியான கவிதை, ஜுன் 1913 (இ) 'லக்மான ஹன்ட' என்ற தலைப்பில் கே.சி.பெரேரா என்ற கட்டுக்குருந்த மொறட்டுவையைச் சேர்ந்தவரால் 'கீத வாடி' யில் எழுதப்பட்ட கவிதை, பெப்ரவரி 03 1915. (ஈ) தினமின பத்திரிகைக்கு சிங்க என்பவர் அனுப்பிவைத்த கடிதம். ஏப்ரல் 29, 1915 - இது முஸ்லிம்களின் மத சம்பந்தமான விழாவொன்றில் சிங்களப் பெண்கள் கலந்துகொண்டதையிட்டு குற்றம் சுமத்துவதாக எழுதப்பட்டிருந்தது. இந்தக் கடிதம் 'அப்பிட்ட வெச்ச தே' என்ற சிறிசேனவின் அண்மைக்கால நூல் ஒன்றின் தலைப்பை மேற்கோள் குறிக்குள் இட்டு தன் வியர்ப்பை வெளிப்படுத்துகிறது.

26. றொபேட்ஸ் 1994 : 263, ஹன்ஸ்கோனின் தேசியவாதம் தொடர்பான எழுத்துக்களில் பெருமளவுக்கு அடிப்படையாக கொண்டது.

27. இங்கே நான் திரு கந்தையா அவர்கள் எங்களது குழுக்கூட்டங்களில் ஒன்றில் வலியுறுத்தி விவாதித்த கருத்தொன்றை சேர்த்துக் கொண்டிருக்கின்றேன்.

28. பலமிக்கது. ஏனென்றால் வெற்றி பெறும் கட்சி (அல்லது கூட்டணி அதிகாரத்திற்கு வருவதென்பது இந்த மாவட்டங்களில் தங்கியிருந்தது. ஏனென்றால் அப்போது விகிதாசார பிரதிநிதித்துவ முறை இல்லாமையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெஸ் மினிஸ்டர் முறையிலமைந்த தொகுதிவாரியாக ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் ஒவ்வொரு பிரதிநிதி தெரிவு செய்யும் முறை இருந்ததுவும் இதற்கு காரணமாகும். இவ்விடயம் தொடர்பாக ஏ.ஜே.வில்சன் 1970ஆம் ஆண்டு தேர்தல் தொடர்பாக 1975ல் எழுதிய நூல் பயனுள்ள ஒன்றாகும்.

29. இந்த நிலைமை தொடர்பான சிங்களப் பேச்சாளர்களின் முறைப்பாடுகள் இந்த விடயத்துடன் சம்பந்தப்பட்ட ஆட்களின் தொகைகளை கணக்கிடக் கூடியதாகவும் இருந்ததாலும் ரெயில்வே மற்றும் பொதுசன தொழில் திணைக்களங்கள் ஆகிய இரண்டிலும் இது மிகவும் தெளிவாகத் தெரியும் ஒன்றாக இருந்தது. ஆனால், இந்தச் சிங்களவர்களில் யாரும் ஐரோப்பியர் அல்லாத தோட்ட உரிமையாளர்களை இலங்கையின் பட்டியலில் எண்ண முயலவோ இலங்கை வர்த்தக சம்மேளனத்தை பார்க்கவோ முயன்றதில்லை. ∴பேர்க்குஷனின் 1917, 27ம் ஆண்டுகளுக்கான இலங்கைப் பட்டியல்கள் (றொபேட்ஸ், 1982) தொடர்பான எனது ஆய்வு 1940 களில் நிலவிய நிலைமை தொடர்பான ஒரு நம்பகமான குறிகாட்டியாகச் செயற்படுகிறது என்றால் இந்த செல்வத்தின் பெரும்பகுதியானது சிங்கள பூர்சுவாக்களின் கைகளிலேயே இருந்தது. நிலச் சீர்திருத்த அனுபவங்கள் அநேகமாக இதை வெளிப்படுத்தக் கூடும் அத்துடன் நிச்சயமாக, எனக்குத் தெரிந்த அளவில், ஒரு சில தோட்ட உரிமையாளர்களில் 1970களின் போது தற்கொலை செய்துகொண்டவர்கள் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்களே.

30. இந்த அபிப்பிராயம் பெரும்பாலும் தற்கால நிருபனத்தையே தருவதுடன் எதிர்க் கருத்துக்களுடன் சேர்ந்து வருவதாலும் இதற்கு பொருத்தப்பாடான ஓர் அழுத்தம் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

31. 20ம் நூற்றாண்டின் முதல் இரண்டு தசாப்தங்களிலும் ‘சிலோன் இன்டிபெண்டன்’ , ‘சிலோன் மோனிங் லீடர்’, ‘சிலோன் ஸ்டான்டட்’ போன்ற பத்திரிகைகளாக இருந்தன. பின்னையது சிறிது காலத்தில் நின்று போனதுடன் ‘சிலோன் டெய்லி நியூஸ் 1910ல் ஆரம்பமானது. (த டைம்ஸ் ஒப் சிலோன், த சிலோன் ஒப்சேவர் என்பவை ஐரோப்பிய நலன்களின் அடிப்படையில் இயங்கியவை. பின்னையது சில காலத்தின் பின் விஜயவர்தனவின் நிறுவனத்தினால் வாங்கிக் கொள்ளப்பட்டது.

32. எனக்குத் தெரிந்த விதத்தில் சேர்.பொன் கொத்தலாவல மட்டுமே பிரித்தானியருக்கு சொந்தமான ஒரு பிரபுக்களின் மாளிகையில் முதலீடு செய்திருந்தார். இது கூட நடந்தது 1945க்குப் பிறகுதான்.

33. நடுத்தர (அல்லது உள்ளூர்) மேட்டுக் குடியினர்க்கும், தேசிய மேட்டுக் குடியினர்க்கும் இடையிலான தனித்துவங்களுக்கு பார்க்க: றொபேட்ஸ் 1974, 1978. அத்துடன் பார்க்க: றொபேட்ஸ் 1994 அத்:12 - இது 1890 களில் இருந்த நடுத்தர மேட்டுக்குடியினரை மக்கள் ஐக்கிய முன்னணியின் (எம்.ஈ.பி) பஞ்ச மகா பலவேகயவின் 1956ம் ஆண்டு வெற்றியுடன் இணைக்கும் நடவடிக்கைகளை அறிந்துகொள்ள உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. அருணாசலம் அவர்கள் இலங்கை தேசிய காங்கிரசின் அங்குரார்ப்பண விழாவில் ஆற்றிய உரையை சிறிசேன வியாக்கியானம் செய்தார். அவர் டி.ஆர்.விஜயவர்தனவுக்கு 1929ம் ஆண்டு நிகழ்ந்த லேக்ஹவுஸ் வேலை நிறுத்தத்தை முறியடிப்பதற்கு கருங்காலிகளை தருவிப்பதில் உதவவும் செய்தார்.

35. இது ஜீ.சி.மெண்டிஸ் என்பாரின் அபிப்பிராயம். அவரை நான் 1960களில் சந்தித்த போது இக்கருத்தை அவர் கொண்டிருந்தார். கலாநிதி சீ.ஏ.ஹேவாவிதாரண (தர்மபாலவின் சகோதரர்) 1910 இன் பின் உள்நாட்டவர்கள் மத்தியில் ஆதிக்கம் செலுத்திவந்த மேட்டுக்குடி அணியின் உறுப்பினர்களில் ஒருவர் என்பதையும் கவனிக்கவும். அவரது அரசியல் கருத்துக்கள் தொடர்பாக சிறிதளவு வேலையே செய்யப்பட்டுள்ளது.

36. றொபேட்ஸ் 1994: 251, 1994டி: 348-49

37. இரண்டு சேனநாயக்காக்கள் துணுவில்ல குடும்பத்தில் ஏற்கனவே திருமணம் செய்திருந்தனர். இது பெருமளவுக்கு, பண்டாரநாயக்காவுடன் ஒப்பிடுகையில் பணத்தையும் தகுதியையும் பெற்றுக்கொள்வதுடன் சம்பந்தப்பட்டது. பண்டாரநாயக்காவினது பணத்தாலும் தகுதியாலும் சிறிமாவோ ரத்வத்தையை விடவும் உயர்வானதாக இருந்தது.

38. இந்தப் பகுதி திட்டமிட்டு 1956க்குப் பிந்திய யுகத்தின் தத்துவப் பரிமாணத்தின் மீது தன் கவனக் குவிப்பைக் கொண்டிருக்கும். இந்த மட்டுப்படுத்தப்பட்ட பரம்பல், வர்க்க அமைப்பு, வாய்ப்புகளின் ஜனநாயக மயமாக்கலின் தொடர்ச்சியாக பல சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்ட பொருளாயத நிலைமைகள் என்பவற்றில் ஏற்பட்ட மாற்றங்களின் வெளிப்பாடுகளை ஒதுக்கிவிடுகிறது. இந்தத் தெரிவானது (1) இந்த நூற்றாண்டின் பிந்திய அரைப் பகுதியில் நிலவிய வர்க்க அமைப்புக்களும் அதன் தற்காலிக அசைவுகளும் பற்றிய நல்ல ஆய்வுகள் இல்லாமல் (2) அரசியல் நடைமுறைகள் மற்றும் அரசியல் பொருளாதாரம் தொடர்பான அத்தியாயங்கள் இந்த விடயத்துடன் குடியிருக்கும் என்ற எதிர்பார்ப்பு என்பவற்றாலேயே ஓரளவுக்கு ஆதிக்கம் செய்யப்பட்டு வந்தது எனலாம்.

39. பூர்ஷ்வா மற்றும் மத்தியதர வர்க்கத்தின் மாவெரிக் பகுதிகளை உள்ளடக்கிய சக்திகள் மற்றும் ஆயுர்வேத வைத்தியர்கள் பிரதேச பாடசாலை ஆசிரியர்கள், முதலாளிகள் மற்றும் சங்கவின் உள்ளிருந்த நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட பகுதிகள் என்பவற்றை உள்ளடக்கியதாக இச்சக்திகள் இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. இவ்விடயத்தில் ஒரு உறுதியான முடிவுக்கு வருவதற்கு முன்பாக 1920 - 1940 களில் வெளியான தமிழ் மொழிமூல தொடர்புசாதனங்களை ஆய்வு செய்வது மிகவும் அவசியமானதாகும். இந்த சித்திரத்தில் ஒப்பீட்டளவில் அண்மைக்காலத்தைய 19ம், 20ம் நூற்றாண்டில் மலேசியாவுக்குள்ளான சீனர்களது நுழைவையும் சேர்த்துக்கொள்வது அவசியமானதாகும். அதாவது இது ஒரு சட்டபூர்வ/சட்டபூர்மற்ற நிலைமை தொடர்பான தற்காலிக நிலைமையாகும். இந்த அர்த்தத்திலும் அவர்களது குடிப்பரம்பல் விதத்திலும் மலேசியாவின் சீனர்கள் இந்தியத் தமிழர்களுக்கு அல்லது இலங்கையிலுள்ள தோட்டப்புற தமிழர்களுக்கு நெருக்கமானவர்களாவர்.

41. கொறிய அரச சபையின் அமைச்சர் மண்டலத்தில் ஒருவராகவும் இருந்தார். (அத்துடன் 1931 - 1947 வரையான காலப்பகுதியில் இந்த அமைச்சர் மண்டலம் தான் அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கான கிளர்ச்சியின் முன்னனிப் படையாக இருந்தது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது) ஜீ.சீ.எஸ்.கொறியா, சீ.ஈ.கொறியா ஆகியோர் 1925ல் எழுதப்பட்ட மகேந்திரா ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைக்காக யாழ்ப்பாணம் சென்ற குழுவில் இருந்தார்கள். இந்த ஒப்பந்தம் இலங்கை தேசிய காங்கிரஸின் டிசம்பர் மாத அமர்வில் தன்னிச்சையாக கைவிடப்பட்டது. (றொபேட்ஸ் 1994 : 252- 52) சிலாபத்தைச் சேர்ந்த சக்திமிக்கதான ஒரு குடும்பம், விட்டுக்கொடுப்புக்கும் ஒரு நாட்டுள் தேசியத்துவத்தை இனத்தை அங்கீகரிப்பதற்கும் தயாராக இருந்ததை ஒரு விபத்து என்று கொள்ள முடியாது. (பார்க்க சீ.ஈ.கொறியாவின் 1925 டிசம்பர் மாத உரை)

42. அரசியல் பேரம் பேசல் என்ற தலைப்பிலான சிலோன் டெய்லி நியூஸின் ஆசிரியர் தலையங்கம்.

43. வெளிப்படையான காரணங்களுக்காக நான் பிரதான முரண்பாட்டில் என் கவனத்தை குவித்துள்ளேன். அத்துடன் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ள முஸ்லிம்கள் தொடர்பான கட்டுரைகளும் அரசியல் நடைமுறை தொடர்பான கட்டுரைகளும் முஸ்லிம் சமூகத்துடனான உறவு, சிங்கள சமூகத்தின் சிந்தனையில் கொண்டிருந்த தாக்கதை ஆராயும் என்று நம்புகிறேன். பிரித்தானியர் காலத்தில் முஸ்லிம் சமூகத்துடன் ஏற்பட்ட முறுகல் நிலையும் கூட சிங்கள தேசியவாதத்தை பேணிக் காத்தது என்பது தெரிந்தது. (பார்க்க றொபேட்ஸ் 1994 அத் 7,8) இந்த விடயப்பரப்பில் இன்று உள்ள உணர்வுச் சிக்கலும் முஸ்லிம்களை நோக்கி திருப்பிவிடப்பட்டுள்ள முற்சாய்வுகளும் பேரினவாதத்தின் வெளிப்பாடுகளே. (அத்துடன் இதேமாதிரியான தீவிரவாதம் முஸ்லிம் சமூகத்திலும் காணப்படுவதை ஒருவரால் அவதானிக்க முடியும். இந்த நாட்டிலுள்ள முஸ்லிம்கள் அல்லது அவர்களின் சில பிரிவுகள் எந்த அளவுக்கு தம்மை ஒரு தேசமாகவும் தமக்கு சுய நிர்ணய உரிமை அவசியம் என்றும் தகுதியான வெளிப்படையான அர்த்தத்தில் பிரகடனம் செய்கின்றன என்பது எனக்குத் தெரியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்பு - அ

## மத்திய கால சிங்கள உலகின் தீவுக்கான பெயர்கள்

திரிசிம்ஹல

திரிசிங்ஹலே

திசிஹல

துளறயாய

துன்றட்ட

துன்வக்க

துன்லங்கா

துன்சிங்ஹலய

சிங்ஹலய (சிம்ஹலயா)

சிங்ஹலே

சிஹலே

சிஹலறட்ட

சிஹலய

சிஹலதீப

சிஹலதுவிப

சிறிலங்கதுவீப

லங்கதுவீப

லங்கா

லங்காவா

லக்திவ

லகா (லக்)

லக்துன்றட்ட

சிறிலக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## REFERENCES

**Amunugama, Sarath** 1979 'Ideology and class interest in one of Piyadasa Sirisena's novels: the new image of the "Sinhala-Buddhist" nationalist,' in M. Roberts (ed.) *Collective identities, nationalisms and protest in modern Ceylon*, Colombo: Marga Publications, pp. 285-304.

**Anderson, Benedict** 1983 *Imagined communities*, London: Verso.

**Codrington, H. W.** 1909 'The Kandyan Navandanno', *Journal of the Royal Asiatic Society, Ceylon Branch*, 21: 221-53.

**Cûlavamsa** 1953 *The Cûlavamsa*, trans. by W. Geiger, Colombo: Ceylon Government Information Department.

**De Silva, K. M.** 1981 *A history of Sri Lanka*, Delhi: Oxford University Press.

**De Silva, K. M.** 1986 *Managing ethnic tensions in multi-ethnic societies. Sri Lanka 1880-1985*, Lanham, New York: University Press of America.

**De Silva, K. M.** 1996 *Devolution in Sri Lanka. S W R D Bandaranaike and the sharing of power*, Kandy: ICES.

***De Silva, D. G. B.** 1998 'New light on Vanni chiefs, based on historical tradition, palm-leaf manuscripts and official records',* Journal of the Royal Asiatic Society, Ceylon, *n.s. being the Sesquicentennial Special Number, vol. LXI: 153-204.*

**Dharmadasa, K. N. O.** 1992 ' "The people of the lion": Ethnic identity, ideology and historical revisionism in contemporary Sri Lanka,' *Ethnic Studies Report* 10: 37-59.

**Farmer, B. H.** 1957 *Pioneer peasant colonisation*, Cambridge: Cambridge University Press.

**Freitag, Sandria B.** 2000 'Visions of the nation: theorizing the nexus between creation, consumption and participation in the public sphere,' in R. Dwyer and C. Pinney (eds.) *Pleasure and the nation. History, politics and public culture in India*, Delhi: Oxford University Press, forthcoming.

**Galaty, John** 1982 'Being "Maasai"; being "People-of-Cattle": ethnic shifters in East Africa,' *American Ethnologist* 9: 1-20.

**Godakumbura, C. E.** 1955 *Sinhalese Literature*, Colombo: Colombo Apothecaries Co.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Henaff, M.** 1998 ***Claude Levi-Strauss and the making of Structural Anthropology***, Minneapolis: University of Minnesota Press.

**Herzfeld, Michael** 1987 *Anthropology through the looking glass*, Cambridge: Cambridge University Press.

**Horowitz, Donald L.** 1980 *Coup theories and officers' motives, Sri Lanka in comparative perspective*, Princeton: Princeton University Press.

***Iñgrîsi Hatana*** 1951 ed. by K R Jayatunga Appuhamy. Originally circa 1804 by Valigala Mudali.

**Kearney, Robert N.** 1967 *Communalism and language in the politics of Ceylon*, Durham: Duke University Press.

**Kearney, Robert N.** 1973 *Politics in Ceylon (Sri Lanka)*, Ithaca: Cornell University Press.

**Kodikara, Shelton** 1970 'Communalism and political modernisation in Ceylon,' *Modern Ceylon Studies* 1: 94-114.

**Krishna, Sankaran** 1998 'Divergent narratives; Dravidian and Eelamist Tamil nationalisms', in M. Roberts (ed.) *Sri Lanka. Collective identities revisited*, Colombo: Marga Publications, pp. 315-46.

**Newman, Gerald** 1987 *The rise of English nationalism*, New York: St. Martin's Press.

**Obeyesekere, Gananath** 1966 'The Buddhist pantheon in Ceylon and its extensions,' in Manning Nash (ed.) *Anthropological studies in Theravada Buddhism*, New Haven: Yale University, Southeast Asian Series.

**Obeyesekere, Gananath** 1979 'The vicissitudes of the Sinhala-Buddhist identity through time and change', in M.Roberts (ed.) *Collective identities, nationalisms and protest in modern Sri Lanka*, Colombo: Marga, pp. 279-314.

**Obeyesekere, Gananath** 1993 'Dutthagâmini and the Buddhist conscience', in D. Allen (ed.) *Religion and political conflict in South Asia,* Delhi: Oxford University Press, pp.135-60.

**Obeyesekere, Gananath** 1995 'Buddhism, nationhood, and cultural identity: a question of fundamentals', in M.E. Marty and R.S. Appleby (eds.) *Fundamentalisms comprehended.* Chicago: University of Chicago Press, pp. 231-56.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***Parañgi Hatana*** 1964 (?) ed. by T. S. Hemakumar, Colombo: ??. [Portuguese War]

**Pieris, Paul E.** 1909 'Parangi Hatanê', in his *Ribeiro's History of Ceilão*, Colombo: Colombo Apothecaries Co., 1909, pp. 244 –270. This poem is the same as the *Râjasîha Hatana* edited by Somaratna, (1968) though the verses are adjacent in their numbering rather than precisely matching.

***Practical Sinhala Dictionary*** *1982* Prâyogika Sinhala shabdakôshaya, *vol I, Colombo: Ministry of Cultural Affairs.*

***Practical Sinhala Dictionary*** *1984* Prâyogika Sinhala shhabdakôshaya, *vol II, Colombo: Ministry of Cultural Affairs.*

***Pûjâvaliya*** 1997 Colombo: Buddhist Cultural Centre.

***Râjasîha Hatana*** 1968 [Râjasinha's War] ed. by H. M. Somaratna, Kandy. Referred to as *RH*.

***Râjâvaliya*** 1954 *Râjâvaliya or a historical narrative of Sinhalese kings*, ed. by B. Gunasekara, Colombo: Govt. Printer.

**Roberts, Michael** 1969 'The rise of the Karavas,' Ceylon Studies Seminar 1968/69 Series.

**Roberts, Michael** 1974 'Problems of social stratification and the demarcation of national and local elites in British Ceylon,' *Journal of Asian Studies* 23: 549-77.

**Roberts, Michael** 1978 'Reformism, nationalism and protest in British Ceylon', in P.Robb and D.Taylor (eds.) *Rule, protest, identity. Aspects of modern South Asia*, London: Curzon Press, pp. 159-92.

**Roberts, Michael** 1979a 'Stimulants and ingredients in the awakening of latter-day nationalisms' in M. Roberts (ed.) *Collective identities, nationalisms and protest in modern Sri Lanka*, Colombo: Marga Publications, pp. 214-42.

**Roberts, Michael** 1979b 'Problems of collective identity in a multi-ethnic society: sectional nationalism vs Ceylonese nationalism,' in M. Roberts (ed.) *Collective identities, nationalisms and protest in modern Sri Lanka*, Colombo: Marga Publications, pp. 337-60.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Roberts, Michael** 1982 *Caste conflict and elite formation: the rise of a Karâva elite in Sri Lanka, 1500-1931*, Cambridge University Press.

**Roberts, Michael** 1989 'The political antecedents of the revivalist elite within the MEP Coalition of 1956', in C. R. de Silva & Sirima Kiribamune (eds.) *K. W. Goonewardena felicitation volume*, Peradeniya University, pp. 185-220.

**Roberts, Michael** 1990 'Noise as cultural struggle: tom-tom beating, the British and communal disturbances in Sri Lanka, 1880s-1930s,' in Veena Das (ed.) *Mirrors of violence*, Delhi: Oxford University Press, pp. 240-85.

**Roberts, Michael** 1993b 'Nationalism, the past and the present: the case of Sri Lanka', *Ethnic and Racial Studies* 16: 133-66.

**Roberts, Michael** 1994 *Exploring confrontation. Sri Lanka: politics, culture and history*, Reading: Harwood Academic Publishers.

**Roberts, Michael** 1996 'Beyond Anderson: reconstructing and deconstructing Sinhala nationalist discourse', *Modern Asian Studies*, 30: 690-98.

**Roberts, Michael** 1997 'For humanity. For the Sinhalese. Dharmapala as crusading bosat', *Journal of Asian Studies* 56: 1006-32.

**Roberts, Michael** 1999 'Nationalisms Today and Yesterday', in Gerald Peiris and S W R de A Samarasinghe (eds) *History and Politics Millennial perspectives. Essays in honour of Kingsley de Silva, Colombo*: Law and Society Trust, pp. 23-44.

**Roberts, Michael** 2000 "Modernist theory. The printed word. The instance of pre-modern Sinhala society" Mss.

**Roberts, Michael** (ed.) 1977 *Documents of the Ceylon National Congress and nationalist politics in Ceylon, 1929-1940,* 4 vols, Colombo: Department of National Archives

**Roberts, Michael, Ismeth Raheem & Percy Colin-Thomé** 1989 *People inbetween. Vol.1. The Burghers and the middle class in the transformations within Sri Lanka, 1790s-1960s*, Ratmalana: Sarvodaya Book Publishing.

**Rogers, John D.** 1989 'Cultural nationalism and social reform: the 1904 temperance movement in Sri Lanka', *Indian Economic and Social History Review* 26: 319-41.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Rogers, John D.** 1994 'Post-Orientalism and the interpretation of pre-modern and modern political identities: the case of Sri Lanka', *Journal of Asian Studies* 53: 10-23.

**Sinhala Commission** 1999 *Proposals for a new constitution*, Colombo: Samayawardhana Printers for The National Joint Committee.

**Sorata Thero 1926** *Sri Sumangala sabdakosaya*, Colombo: Anula Press.

**Vimalananda, Tennakoon** 1973 *The British intrigue in the Kingdom of Ceylon*, Colombo: Gunasena.

**Vimalananda, Tennakoon** 1984 *Sri Wickrema, Brownrigg and Ehelepola*, Colombo: Gunasena.

**Wickremeratne, L. A.** 1975 'Kandyans and nationalism in Sri Lanka: some reflections', *Ceylon Journal of Historical and Social Studies* n.s. 1 & 2: 49-67.

**Wickremeratne, L. A.** 1995 *Buddhism and ethnicity in Sri Lanka*, Delhi: Vikas.

**Wilson, A. J.** 1975 *Electoral politics in an emergent state: the Ceylon General Elections of 1970*, Cambridge University Press.

**Wriggins, W. H.** 1960 *Ceylon. Dilemmas of a new nation*, Princeton: Princeton University Press.

**Young, R. F. & G. S. B. Senanayaka** 1999 *The carpenter-heretic. A collection of Buddhist stories about Christianity from 18th century Sri Lanka*, Colombo: Karunaratne & Sons.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைக்கல் றொபட்ஸ்

மைக்கல் றொபர்ட்ஸ் (D. Phil, ஒக்ஸ்ஃபோர்ட்), 1961 முதல் 1976 வரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில, சிங்கள மொழிகள் மூலம் வரலாறு கற்பித்த இவர், 1977ம் ஆண்டு முதல் அடலெய்ட் பல்கலைக்கழகத்தில் சமூக மானிடவியல் துறையில் கற்பிக்கின்றார். அங்கு இப்பொழுது அவர் ஆய்வுப் புலமையாளராக (Reader) உள்ளார்: அவரது முக்கிய ஆய்வுகள் பின்வருமாறு Elites, Nationalisms and the Nationalist Movement in British Ceylon; Caste Conflict and Elite Formation:The Rise of a Karava Elite in Sri Lanka, 1500 - 1931; People In between: The Burghers and the Middle class in the Transformations within Sri Lanka, 1790s -1980s; Exploring Confrontation Sri Lanka: Politics, Culture and History; Crosscurrents: Sri Lanka and Australia at Cricket, இவர் பல்வேறு கட்டுரைகளை எழுதியுள்ளமையுடன் பல நூல்களை பதிப்பித்துள்ளார். இவர் பதிப்பித்துள்ள நூல்களுட் சில : (1) Using Oral Sources: Vansina and Beyond, special issue of Social Analysis, Vol. 4, Sept. 1980, edited by Kenneth Brown and Michael Roberts. (2) The two series on Nationalism and Politics in Sri Lanka Published by the Marga Research Institute, 1979 and 1997/98.

## சிங்களத்துவமும் சிங்கள தேசியமும்

16ம், 20ம் நூற்றாண்டுகளுக்கிடையே கிளம்பிய பிரக்ஞையின் இயல்புகளை விளக்கமாக எடுத்துக் கூறுவதற்கு பண்பாட்டியல் நோக்கு முறையினை இக்கட்டுரை கையாள்கின்றது. பிரித்தானிய ஆட்சிக்கு முற்பட்ட காலத்தில் "சிங்கள" என்பது அரசியல் முக்கியத்துவமற்ற ஒரு வகைபாடு எனக் கூறும் நிலைப்பாட்டை இக்கட்டுரை எதிர்க்கின்றது. ஆயினும் ஒருபுறம் சிங்கள அல்லது திரிசிங்களய என்ற எண்ணக்கருவுடன் இணைந்து கிடக்கின்ற அதிகாரப்படி நிலைப்பட்ட அரச மைய நிலைப்பட்ட, குழும தனித்துவங்களின் வடிவமைவுகள் பற்றிய வேறுபாடுகளை எடுத்துக்கூறி மறுபுறமாகத் தொடர்ந்து 19ம் நூற்றாண்டின் பிற்கூற்றில் மேற்கிளம்பிய சிங்களத் தேசிய வாதத்தினைத் தெளிவுபடுத்துகிறது. 1815/18க்கு முன்னர் உள்ள காலப்பகுதியில் தோன்றிய உணர்வு நிலையானது 1550 முதல் 1670 வரை வளர்ந்த தொடர்ச்சியான யுத்தங்களும் இக்காலகட்டத்தில் தோன்றிய "ஹட்டன் கவி" (போர்ப் பாடல்கள்) வழியாக நடந்த பண்பாட்டுக் கையளிப்புக் காரணமாகவும் ஏற்பட்டது எனலாம். இந்த இரு கால கட்டங்களினூடேயும் தம்மதுவீப்ப, சிங்களதுவீப்ப என்ற எண்ணக்கருக்கள் வழியாக வருகின்ற சிந்தனைத் தொடர்ச்சியும் மறுபுறத்தில் "பிட்ட", "ரட்ட", "ப(ற)ற" என்ற சொற்கள் ஏற்படுத்திய மன உணர்வுகள் பேணி வந்துள்ள வேறுபாடுகளின் வலுவையும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

இந்தக் கருத்துக்களை அடித்தளமாகக் கொண்டு இக்கட்டுரை கடந்த சில நூற்றாண்டுகளுக்குள் பிரித்தானியர் என்ற பதத்துக்குள் ஆங்கிலேயர் தங்களை மாத்திரம் உட்படுத்திக் கொண்டனரோ அதே போன்று நவீன காலத்தில் இலங்கையர் (Sri Lankans) என்பதற்குள் சிங்களவரை மாத்திரமே உட்படுத்திக் கொண்டதான போக்கை வெளிக்கொணர்கிறது. சுருக்கமாகக் கூறினால் இதற்குள் ஒரு சிந்தனை வடிவங்களினூடே கட்டியெழுப்பப்பெற்ற இயல்புப் போக்கு மேலாண்மை உட்கிடையாகக் கரந்து கிடக்கின்றது. இவ் வெளிச்சத்தில் நோக்கும் பொழுதுதான் இலங்கையில் இனக்குழும பிரச்சினை மேற்கிளம்பியுள்ள இந்நாட்களில் கூட சிங்களவாதிகள் இலங்கைத் தேசியத்தினுள் சிங்கள தேசாபிமானம் உடன் உறைவதை அனுமதிக்கின்ற ஒரு கூட்டாட்சி நோக்கினுக்கு ஏன் இடமளிக்கின்றார்களில்லை? எனும் வினாவைக் கிளப்புகின்றது.

இதற்குரிய பதிலைத் தரக்கூடியவை பற்றிப் பேசாமல் இக்கேள்வியை எழுப்பும் தொனிப்புடன் முடிவுறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் இனக்குழும மோதல் பற்றிய ஒரு வரலாறு
## மீள் நினைவு,மீள் இணக்கம், மீள் விளக்கம்.


1 கொட்ஃப்றி குணதிலக
இனக்குழும மோதலைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தை
2 லிஸ் பிலிப்சன்
இலங்கையில் பேச்சுவார்த்தைக்கான முறைவழிகள்
3 சங்கரன் கிருஷ்ணா
இலங்கையின் இனக்குழும மோதலில் இந்தியாவின் வகிபாகம்
4 மைக்கேல் றொபேர்ட்ஸ்
சிங்களத்துவமும் சிங்கள தேசியமும்
5 ஸ்ரான்லி ஜயவீர
இனக்குழும மோதலும் சிங்களப் பிரஞ்ஞையும்
6 தேவநேசன் நேசையா
தமிழ்த் தேசியம்
7 உ. சேரன்
ஆறாந்திணை: நினைவுகளும், வரலாறும் புலம் பெயர் தமிழரின் கற்பனையும்
8 டானியல் பாஸ்
மலையகத் தமிழர் அடையாளத்தின் பின் புல அமைவுகள்
9 அமீர் அலி
முஸ்லிம் சாஹியத்தின் பன்முக அடையாளங்களும் அரசியல் தேர்ந்தெடுப்புகளும்
10 கொட்ஃப்றி குணதிலக
சமூக பொருளாதார அபிவிருத்தியின் இனக்குழும பரிமாணங்கள்
11 ராதிகா குமாரசுவாமி
காட்சியமைப்பு முகாமை: பால் வேறுபாடு, இனக்குழுமத்துவம், மோதல்
12 தாரிணி ராஜசிங்கம் சேனாநாயக்க
எல்லைக் கோட்டில் இனக்குழுமத்துவம்: வரலாற்றை மாற்றியமைத்தல்
13 ஜயதேவ உயன்கொட
அரசியல் சீர்திருத்தம் என்னும் பிரச்சினை
14 தீபிகா உடகம
இனக்குழும மோதல்: ஆட்சியமைப்பு மாற்றமே இறுதி மருந்தாக.
15 றோஹான் எதிரிசிங்க
ஆட்சியமைப்பு பற்றிய வினாவெழு விடயங்கள்
16 சி. ஆர். டி. சில்வா மற்றும் ரி. பத்தலோமியூஸ்
மீள் இணக்க முறைவழியில் பௌத்த சங்கத்தின் வகிபாகம்
17 நெவில் ஜயவீர
இனக்குழும மோதலில் திருச்சபைகளின் வகிபாகம்
18 ஜெஃப்றி அபயசேகர
திருச்சபைகளின் வகிபாகம்: வரலாற்றுப் பருநிலை நோக்கு
19 திரு கந்தையா
இலங்கையின் இனக்குழும மோதலும் ஊடகத்துறையும்



மார்க்கா நிறுவனம்.

அஞ்சல் பெட்டி எண் 601, 93/10 துட்டுகெமுனு வீதி, கிரில்லபன, கொழும்பு 06. இலங்கை.
தொலை பேசி 94-1-848544 / 829051.தொலை நகல்:94 -1 -828597.
E-mail:marga@sri... w.lanka.net/marga/



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org